**அரசு ஊழியர்**

ஜனவரி 2019

மலர் : 40 இதழ் : 1

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

### வேர்வை சிரிக்குது!

இரும்பை அடிச்சா நிமிருது
இளகிப் பழுத்தது - சில
இதயங்கள் மட்டும் வெகுநாளா
இருந்தபடியே இருக்குது!

விரும்புவ தெல்லாம் செய்து தருபவன்
உடம்பை வறுமை உருக்குது - இந்த
விந்தை உலகைக் கண்டு அவன்
சிந்தும் வேர்வை சிரிக்குது!

- **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

# “தேசத்தை பாதுகாக்கும் கடமையில் நாமும்”

**2019**ஆம் ஆண்டு பிறந்திருக்கும் இத்தருணத்தில், கடந்த நாலரை ஆண்டுகள் மத்திய அரசாங்கம், கடந்த மூன்று ஆண்டு கால மாநில அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை அனைத்து விதத்திலும் தோல்வியடைந்துள்ளது. மத்திய அரசு தொடுத்துள்ள சுமைகள் மக்கள் மீது ஏற்றப்பட்டிருப்பது மிகவும் மோசமானது. முதலாளித்துவத்தையும், ஊழலையும் முன்னெப் போதையும்விட மிகவும் தெளிவான வெளிச்சத் திற்கு கொண்டு வந்தது. மேலும் அரசமைப்பு சட்டத்தையும், அனைவரின் அடிப்படை உரிமைகளையும் ஒழித்துக்கட்ட ஆட்சியாளர்கள் மேற்கொண்ட சீர்குலைவு நடவடிக்கைகளும் இந்த காலகட்டத்தில் நடந்தேறியுள்ளது.

பொருளாதாரத்தை கையாண்ட விதம், விவசாயிகள் மீதான நெருக்கடி, நாட்டுப்புற ஏழை மக்கள் மத்தியில்அளவிட முடியாத துன்ப துயரங்களை உருவாக்கியுள்ளது.

2014-ல் மத்திய அரசு ஆட்சிக்கு வந்தபோது, அவர்கள் அளித்த உறுதிமொழியான ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை, ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் வழங்கப்படும் என்பவை பொய்யாகிப் போயுள்ளது. இளைஞர்கள் மற்றும் படித்த இந்தியர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் உச்சத்தில் உள்ளது. இந்த விசயத்தை மக்கள் மத்தியில் தெரிவிப்பதை மத்திய அரசு நிறுத்திக் கொண்டுள்ளது.

மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி என்பது வங்கித் துறையில் ஏற்பட்டுள்ளது. வாராக் கடன்களின் சதவீதம் உயர்ந்துள்ளது. கார்ப்ப ரேட்டுகள் பெற்ற வாராக் கடன்கள் 1 லட்சத்து 44 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டிருக் கின்றது. கடன்களை வசூலிப்பதில் நடவடிக்கை ஏதுமில்லை. ரபேல் விமானம் தொடர்பாக அம்பானி குடும்பத்திற்கு மிகப்பெரிய அளவில் அரசாங்கம் அள்ளிக் கொடுத்து ஊழல் செய்துள்ளது. ஊழலுக்கு எதிரானவர்கள் என்று கூறிய மத்திய அரசின் நிலை ரபேல் ஒப்பந்தத்தை தொடர்ந்து தவிடுபொடியாகியுள்ளது.

கருப்புப் பணத்தை வெளிக்கொணர்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை, "மரண அடி" என மார் தட்டிய மத்திய அரசின் நடவடிக்கைகள், மக்களின் பொருளாதாரத்தையும் சிறுகுறு தொழில்கள் நாசமாகிப் போக காரணமாக அமைந்தது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அடுத்ததாக இருந்த நான்கு மூத்த நீதிபதிகள் நீதித்துறையின் ஒருமைப்பாடு பாதிப்பு குறித்து பத்திரிகை யாளர்களை சந்தித்து வெளிப்படுத்தியது அரசமைப்பு சட்ட நிறுவனங்கள் மீது அரசு தொடுத்த தாக்குதலுக்கு உதாரணமாகும்.

சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள், வன்கொடுமை சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கான நடவடிக்கைகள், மதக்கல வரங்களை ஏற்படுத்தி அப்பாவி மக்களை பலி கொடுத்தது, மதவெறி சக்திகளால் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறும் அவலம்.

தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்துவது, ஜனநாயக உரிமைகளை மறுப்பது, இந்தியா முழுமைக்கும் தேசிய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்தி ஓய்வுகால சமூக பாதுகாப்பு அடித்தளங்களை தகர்த்தெறிவது, மத்திய-மாநில அரசுகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பாதது, அவுட் சோர்சிங், அத்துக்கூலி நியமன முறைகளை ரத்து செய்யாமல், தனியார்மயத்தை ஊக்குவிப்பது என்ற நடவடிக்கைகள் மத்திய அரசால் தொடர்ந்து நடத்திவரும் அவலம் தொடர் கதையாகிவிடுகிறது.

தொடர்ச்சியான பெட்ரோல், டீசல் விலை உயர்வு, இதனால் அனைத்து அத்தியாவசிய பொருட்கள் மீதான விலை உயர்வை தடுக்க எந்த விதத்திலும் எந்த முயற்சியும் மத்திய அரசு மேற்கொள்ளவில்லை.

இவையனைத்தும் மத்திய அரசால் மட்டுமல்ல, அதனை பின்பற்றுகிற தமிழ் மாநில அரசாலும் தொடர்ந்து பின்பற்றிவரும் நிலை. இந்தத் தாக்குதல்களை எதிர்த்து கடந்த நாலரை ஆண்டுகளில் தொடர்ந்து பல இயக்கங்களும், போராட்டங்களும், விவசாயிகளாலும், தொழி லாளர் வர்க்கத்தாலும், உழைக்கும் மக்களின் பல்வேறு பிரிவினராலும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்தகைய மத்திய அரசின் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் இயக்கங் களை மேலும் விரிவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மத்திய-மாநில அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் பிரச்சனைகளும் இந்த காலக்கட்டத்தில் தீர்வினை எட்டவில்லை. குறிப்பாக சமூக பாதுகாப்புத் திட்டமான ஓய்வூதியம் பாதுகாக்கப்படவில்லை. அரசுப் பணிகளின் நிரந்தரமின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், ஊதிய குளறுபடிகள், அவுட்சோர்சிங், தொகுப்பூதிய ஊழியர்களான சத்துணவு, அங்கன்வாடி, கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை போன்ற தாக்குதல்களும், அரசியலமைப்புச் சட்டம் அளித்துள்ள ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகிற நிலை இவற்றை எதிர்கொள்ள வேண்டிய காலச்சூழல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக எல்லா வகையிலும் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் அரசு ஊழியர் களும் ஒரு பகுதியினர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இத்தருணத்தில் மத்திய அரசு தேர்தலை சந்திக்க உள்ள நிலையில் மக்கள் ஒற்றுமையை கட்டக்கூடிய வகையில் நமது முயற்சிகள் 2019ஆம் ஆண்டு அமைந்திட வேண்டும். அந்த நோக்கில் 2019 ஜனவரி 8-9 தேதிகளில் நடைபெறவுள்ள மத்திய தொழிற் சங்கங்களின் இரண்டு நாள் அகில இந்திய வேலை நிறுத்தப் போராட்டம் முக்கியமானதும், வரலாற்று மாற்றங் களை மாற்றி அமைக்கக்கூடிய முடிவாகும்.

2019 மக்களவைத் தேர்தல் வரவுள்ள நிலையில், இன்றைய நிலையில் மிகவும் குறிப்பிடத்தக்க தேர்தலாக இது இருக்கப் போகிறது. நம் அரசமைப்பு சட்டத்தையும், மதச்சார்பின்மையையும், ஜனநாயகத்தையும், நமது உரிமைகளையும் பாதுகாத்திடும் பணி இக்காலகட்டத்தில் மிக முக்கியமானதாகும் என்பதை அரசு ஊழியர்களாகிய நாமும் உணர வேண்டும்.

இத்தகைய மாபெரும் பணியின் ஒரு பகுதிதான் 2019 ஜனவரி 8-9 அகில இந்திய வேலை நிறுத்தம். நம் முன்னே இருக்கும் சவால்களை எதிர்கொண்டு, நமது உரிமைகளை யும், தேசத்தையும் பாதுகாத்திட ஜனவரி 8-9 அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகர மாக்குவதுதான் 2019ஆம் ஆண்டில் "தேசம் காக்கும் கடமையாகும்".

# தொன்றுதொட்ட உரிமைகளும், வளமைகளும் குன்றிவிடாமல் காக்க, ஒன்றுபட்டு போர் புரிந்து உயர்த்தி பிடிப்போம் நமது பதாகையை!

எழுபது ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு, ஒரு ஜனநாயக நாடாக இன்று இந்தியா ஒவ்வொரு அம்சத்திலும் இதுவரை இருந்திராத அளவுக்கு ஆகப்பெரிய சவாலை சந்திக்கிறது. செல்வத்தின் அபரிமிதமான மையப்படுத்தலையும், ஒரு நவீன நாகரிகமான சமூகத்தினை கட்டுவதன் மூலம் மக்களுக்கு விடுதலை வழங்குவது என்ற நமது குடியரசின் பிரகடனப்படுத்தப்பட்ட நோக்கத்தை அபாயத்திற்குள்ளாக்கும். அதிகரித்து வரும் இடைவெளியையும் ஆளும் வர்க்கங்களால் பின்பற்றப்பட்ட புதிய தாராளமயக் கொள்கைகள் விளைவித்துள்ளன. ஆகப்பெரும் ஆழமான நெருக்கடியை சந்தித்து வரும் கிராமப்புறம், கடன் சுமையில் நொறுங்கி வருகிறது. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புற குடிபெயர்வுக்கு வழிவகுத்துள்ளது.



ஒரு கண்ணிய வாழ்விற்கு தேவையான குறைந்தபட்ச ஊதியத்தைக்கூட உழைக்கும் வர்க்கம் பெறவில்லை; உண்மையான ஊதியம் தொடர்ந்து சரிந்து வருகிறது. முறைசாரா பணி முறையும், ஒப்பந்த பணி முறையும் நிலவும் ஒழுங்காக மாறி, பணி பாதுகாப்போ, சமூக பாதுகாப்போ இல்லாத நிலை நிலவுகிறது- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கணிசமாக உயர்ந்துள்ளது என்று கூறிக்கொண்டிருக்கும்போதே, வேலையின்மை அபாயகர அளவை அடைந்துள்ளது, அது பல்வேறு வடிவங்களிலான சமூக அமைதியின்மையை உருவாக்கும்.

கட்டமைப்பு நெருக்கடி என்று தன்னை நிரூபித்துக் கொண்டுள்ள உலக பொருளாதார நெருக்கடி இந்த செய்முறையை மேலும் மோசமாக்கும்.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. இந்திய அரசியலை மேலும் வலதுசாரியை நோக்கி நகர்த்தியுள்ளது. இன்று இந்தியாவை ஆட்சி செய்யும் ஆர்எஸ்எஸ்-பாஜக கூட்டு ஜனநாயகம் - சமஷ்டி கூட்டமைப்பு மற்றும் அரசியலமைப்பு நெறிகளைக்கூட அச்சுறுத்துகிறது. நவீன மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகத்தின் ஒவ்வொரு நிறுவனத்தையும் வெறிபிடித்த பிரபுத்துவ, எதேச்சதிகார, மதவெறி இந்து ராஷ்டிரா நிறுவனமாக மாற்ற எல்லா முயற்சிகளையும் செய்கிறது. இந்த சக்திகளால் அவிழ்த்துவிடப்படும் சமூக வன்முறையும், கும்பல் தாக்குதலும் சட்டத்தின் ஆட்சியை மரணிக்க வைத்து, காட்டாட்சிக்கும் சாத்தியமான உள்நாட்டு யுத்தத்திற்கும் சமூகத்தை இழுக்கின்றன. தலித்துகளும், மலைவாழ் மக்களும், சிறுபான்மையினரும் குறிவைத்து இந்த சக்திகளால் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர்.

'சுதேசி' மற்றும் போலி தேசியவாத முழக்கங்களை முன்வைத்து அதிகாரத்திற்கு வந்த மோடி அரசாங்கம், ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முழுவதுமாக அடிபணிந்து, புதிய தாராளமய வளர்ச்சிப் பாதையை மேலதிக தீவிரமாக பின்பற்றுகிறது. பாதுகாப்புத் துறை உட்பட அனைத்து பகுதிகளிலும் 100 சதவீத அந்நிய நேரடி மூலதனத்திற்கு அது அனுமதி அளித்துள்ளது. வேலையின்மை, விலைவாசி உயர்வு, பெரு நிறுவன ஊழல் மற்றும் திவாலாக்கம் ஆகியவை கட்டுப்பாடின்றி வளர்கின்றன.

நடப்பு சூழ்நிலைகளில், புதிய தாராளமய கொள்கைகளுக்கு எதிராக வும், 'இந்துத்துவா' தலைமையிலான மதவாத அரசியலுக்கு எதிராகவும் உழைக்கும் மக்களின் ஒவ்வொரு பிரிவும் எதிர்ப்பு காட்டுகிறது. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை சமாளிக்கவும், பெருநிறுவன ஆதிக்கத்தின் ஏகபோகத்தை தூக்கியெறியவும், பல்வேறு பிரிவுகளின் தனித்தனியான, பிரிவுவாரியான போராட்டங்களால் இயலாது. புதிய



தாராளமய சுரண்டலையும், மதவாதத்தையும் முறியடிக்க, பல்வேறு சமூக பிரிவுகள் மற்றும் அடிப்படை வர்க்கங்களில் சாதி மற்றும் மதம் கடந்த, இதுவரை இருந்திராத ஒற்றுமையை இந்தத் தருணத்தின் தேவையாக இருக்கிறது.

அண்மைக் காலமாக, உழைக்கும் மக்களின் முற்போக்கு பகுதிகளை ஒற்றுமைப்படுத்த வெகுமக்கள் அமைப்புகளின் தேசிய மேடை (NPMO) உதவியுள்ளது. புதிய தாராளமயத்திற்கு எதிரான போராட்டத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்த அதனால் முடிந்தது. இவ்வாறு உருவான ஆக வலுவான ஒற்றுமையை மேலும் பலப்படுத்த முடியவில்லை. மேலும், முன்னேற முடியவில்லை. அத்தகைய வளமான மரபுகளுடன் தொடர்பு கொண்ட தொழிற் சங்கங்களும், விவசாய வர்க்க அமைப்புகளும், கடந்த நான்கரை ஆண்டுகளில் நாடு முழுவதிலும் விடாப்பிடியான பெருந்திரள் போராட்டங்களை நடத்தியதன் மூலம், வேறுபட்ட வர்க்க மற்றும் சமூக அமைப்புகளையும், குழுக்களையும், முற்போக்கு தனிமனிதர்களையும் ஒரு பொது மேடையின்கீழ் கொண்டு வருவதில் தலைமை பாத்திரத்தை வகித்துள்ளன.

போராடி பெற்ற உழைக்கும் மக்களின் அனைத்து பகுதி மக்களின் உரிமைகளின் மீதும், நாட்டின் மதச்சார்பற்ற அமைப்பின் மீதும் மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசாங்கத்தின் தாக்குதலுக்கு எதிராக கடும் வேலையை வெளிப்படுத்துகிறது. ‘அச்சி தின்’ (நல்ல நேரம்), விலைவாசி உயர்வு, ஊழல், பெண்களுக்கு எதிரான வன்முறை உருவாக்கம், ‘சப்கா சாத், சப்கா விகாஸ்’ (அனைவருக்குமான உள்ளடக்கிய வளர்ச்சி) ஆகியவற்றை உறுதியளித்து அது அதிகாரத்திற்கு வந்தது. ஆனால், அதன் நான்கு ஆண்டுகளுக்கு மேலான ஆட்சியில், இதற்கு நேர்மாறாக சாதித்துள்ளது. அதன் உறுதிமொழிகளுக்கு துரோகம் செய்ததோடு, கடும் போராட்டங்கள் மூலம் மக்களால் பெறப்பட்ட உரிமைகளையும் அது தாக்குகிறது. சிறுபான்மையினர், ஒடுக்கப்பட்ட பிரிவினர், பெண்கள் மற்றும் சிறுவர்கள், எதிர்ப்புக் குரல்கள் ஆகியவற்றிற்கு எதிராக வன்முறை சூழலை வளர்த்தெடுத்துள்ளது. திட்டமிட்டு திறம்பட செய்யப்படும் இந்த விரோத வளர்ப்பு மற்றும் வன்முறை சூழ்நிலையின் அண்மைக்கால பலியாளாக இதழியலாளரும், சமூக செயற்பாட்டாளருமான கௌரி லங்கேஷ் இருக்கிறார்.

அரசியல் கட்சிகளுக்கான அந்நிய மற்றும் உள்நாட்டு பெருநிறுவன நிதியளிப்பு உள்ளிட்டு ஊழல் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது என்பதையும், முதலாளித்துவத்துடன் உள்ளத் தோழனாய் இருப்பதை யும் குறிப்பிட்டு காட்டுகிறது. ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும் ஒரு தற்கொலை என்ற விகிதத்தில் 2014-15ஆம் ஆண்டில் விவசாயிகளின் தற்கொலை 4 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளதற்கு வேதனையை வெளிப்படுத்துகிறது. நாட்டின் பல்வேறு பாகங்களில் பெரும் எண்ணிக்கையில் பட்டினிச் சாவுகள் நிகழ்வதை வேதனையுடன் குறிப்பிடுகிறது. சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளின்படி குறைந்தபட்ச ஆதரவு விலை அளிப்பதற்கான தனது தேர்தல் வாக்குறுதியை அமல்படுத்துவதற்கு பதிலாக, மத்திய பிரதேசத்தில் மாண்ட்சாவூரில் கண்டபடி, குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் கடன் தள்ளுபடி கோரிக்கைகளை குண்டுகள் மூலமும், படுகொலைகள் மூலமும் பாஜக அரசு சந்திக்கிறது. வேண்டுமென்றே கடனை திருப்பாத பெரு நிறுவன கடனாளிகளின் கடன்களை 2016-17-ல் இதுவரை இருந்திராத சாதனை அளவுக்கு 81,683 கோடி ரூபாயும், மோடி ஆட்சியில் 3 நிதி ஆண்டுகளில் 1.91 இலட்சம் கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்நிய நேரடி முதலீடும், ஒப்பந்த விவசாயம் மூலம் விவசாயத்தை நிறுவனமயமாக்கலும் தீவிரமாக பின்பற்றப்படுகின்றன. பயிர் காப்பீடு என்ற பெயரில் காப்பீட்டு நிறுவனங்கள் இலாபமடைகின்றன. முறையான மறுவாழ்வு திட்டங்களும், முறையான குடியமர்வு திட்டங்களும் இல்லாமல், பலவந்தமான நில கையகப்படுத்தல் மூலம் பெரிய அளவில் கிராமப்புற மக்களின் குடிபெயர்வும், கிராமப்புற ஏழைகளின் உடமைகள் பறிக்கப்படுதலும் நிகழ்கின்றன. வன உரிமைச் சட்டம் அமலாக்கப்படுவதில்லை. ஆதிவாசிகளும், இதர வனத்தின் வசிப்பவர்களும் வெளியேற்றப்படுகின்றனர். ஆதிவாசிகளின் நில உரிமையை பாதுகாக்கும் சட்டங்கள் நீர்த்துப் போக செய்யப்படுகின்றன. வேலையின்மை, குறைந்தபட்ச கூலி இல்லாமை, சமூக பாதுகாப்பு இல்லாமை ஆகியவை காரணமாக விவசாயத் தொழிலாளர்கள் வறுமைக்குள்ளாக்கப்படுகின்றனர். நிதி ஒதுக்கீட்டில் வெட்டு, போதிய வேலையின்மை, ஆகியவற்றிலும்கூட பட்டினிக்குள்ளாக்கப் படுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கோடி பேருக்கு வேலை என்ற உறுதிமொழிக்கு துரோகம் செய்து, அபாயகரமாக சீரழிந்து வரும் வேலை வாய்ப்பு சூழலை எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகிறது. மோடி தலைமையிலான நான்காம் ஆண்டு ஆட்சியில், வேலை வாய்ப்பில்லாத பொருளாதாரம் என்பது மட்டுமின்றி, வேலை இழப்பு பொருளாதாரம் என்பதே உண்மையாக இருக்கிறது. தொழிலாளர்களை அதிகளவில் பயன்படுத்தும் 8 பெரிய துறைகளில் வேலை வாய்ப்புகள் கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அடிமட்டத்திற்கு வீழ்ந்து விட்டதாக அரசாங்க தொழிலாளர் அமைப்பு புள்ளி விவரரங்கள் கூறுகின்றன. டிசம்பர் 2016-ல் முடிவடையும் 9 மாதங்களில் இந்த துறைகளில் 2.31 இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் அமைப்பின் 5வது ஆண்டு வேலை வாய்ப்பு - வேலையின்மை ஆய்வின்படி, நாட்டில் உள்ள சுமடார் 77% குடும்பங்களில் முறையான கூலி/சம்பளம் பெறுபவர் இல்லை. செல்லாப் பண அறிவிப்பு, பொது மற்றும் சேவை வரி அமலாக்கம் ஆகியவற்றின் மிகப்பெரும் எதிர்மறை தாக்கத்தால், வேலையின்மை நெருக்கடியும், அதன் விளைவாக பொது மக்களிடையே நிலவும் வறுமையும் மேலும் கணிசமாக மோசமாகியுள்ளது. அதிகரித்து வரும் வங்கிக் கட்டணங்கள் மூலமும், சமூக நலப் பலன்களை பெற ஆதாரை இணைக்க கட்டாயப்படுத்துவதன் மூலம் இன்னும் நிலைமை மோசமாக்கியுள்ளது.

‘இந்தியாவில் செய்க’ (எளிதாக வர்க்கம் செய்தல் என்ற பெயரில் எண்ணெய், எரிவாயு மற்றும் இதர இயற்கை வள ஆதாரங்களோடு, இந்திய தொழிலாளர்களையும் சுரண்டுவதற்கு, அந்நிய மற்றும் உள்நாட்டு பெரு நிறுவனங்களுக்கு அழைப்பு விடப்படுகிறது. சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதன்முறையாக விவசாயம், சில்லறை வணிகம், தொழில் துறை, ரயில்வே மற்றும் பாதுகாப்பு துறைகளிலும்கூட 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சில்லறை வர்த்தகத்தில் கட்டுப்பாடற்ற அந்நிய நேரடி முதலீட்டினால் சிறிய வர்த்தகர்களுக்கும், சிறிய உற்பத்தியாளர்களுக்கும்கூட பேரழிவை கொண்டு வரும்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான சட்டங்களும்கூட நீர்த்துப்போக செய்யப்படுகின்றன. அல்லது வெளிப்படையாக மீறப்படுகின்றன. முதலாளிகளுக்கு சாதகமாக, அணிதிரள்வதற்கான உரிமை, கூட்டுப்பேர சக்தி, சமூக பாதுகாப்பு பலன்களை கோருவது ஆகிய தொழிலாளர்களின் போராடி பெற்ற உரிமைகளை பாதித்து, தொழிலாளர் நலச் சட்டங்கள் சகட்டுமேனிக்கு திருத்தப்படுகின்றன. தொழிலாளர்களின் வாழ்வு, அவர்களது பாதுகாப்பு, ஆரோக்கிய மற்றும் அவர்களது வாழ்வாதாரம் ஆகியவற்றை பேராசை பிடித்த பெரு நிறுவனங்களின் கருணையின்கீழ் விடுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

பங்கு விற்பனை, ஒட்டுமொத்த விற்பனை, வியூகரீதியான விற்பனை ஆகியவை மூலம் பொதுத் துறைகளை தனியார்மயமாக்கும் பெருமுயற்சிகள் மூலம் தேசிய செல்வத்தை தனியார்மயமாக்குவதை கவலையுடன் சுட்டிக்காட்டுகிறது. தேசியம் என்ற உயர் முழக்கத்தை தாண்டி, பாதுகாப்பு, ரயில்வே, வங்கிகள், காப்பீடு, பாரத் மிகு மின் நிறுவனம் மற்றும் இதர முக்கிய நிறுவனங்களை அந்நிய மற்றும் உள்நாட்டு பெரு நிறுவனங்களிடம் ஒப்படைக்க முயற்சிக்கப்படுகிறது. மானுட வளர்ச்சி குறியீட்டில், அதிவிரைவான சரிவு தீவிர கவலைக்குரிய அம்சம். கோரக்பூர் மருத்துவமனையில் குழந்தைகள் பெருமளவில் கொல்லப்பட்டதிலிருந்து தெரிய வருகிறபடி, சுகாதாரம் மற்றும் கல்வியில் கூர்மையான சரிவும், வணிகமயமாக்கலும் காணப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளாக தலித்துகள் மற்றும் சிறுபான்மையினர் மீது அதிகரித்து வரும் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு கடும் சீற்றத்தை வெளிப்படுத்துகிறது. குஜராத்தில் உனாவில், உத்தரப்பிரதேசத்தில் சஹாரான்புரத்தில் மற்றும் பல இடங்களில் திட்டமிட்ட தாக்குதல்கள் தலித்துகள் மீது தொடுக்கப்பட்டுள்ளன.

‘பசு காப்பாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களால், கும்பல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் படுகின்றன. ‘மாட்டிறைச்சி உண்கிறார்கள்’ என்று சாக்கு சொல்லி, முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர். தேவையான அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் செல்லும் சட்டபூர்வ கால்நடை வர்த்தகர்கள்கூட தாக்குதலுக்கு இரையாகின்றனர். கால்நடை வர்த்தகத்திற்கான தடை மற்றும் கட்டுப்பாடுகள் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றன. குறிப்பாக நாட்டில் உள்ள தலித்துகள், சிறுபான்மையினர் மற்றும் இதர ஏழை பகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டீஸ்கர், ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் ஆதிவாசிகளின் மீதும், காஷ்மீர் மக்கள் மீதும் அவிழ்த்து விடப்பட்டுள்ள கொடூரமான அரசாங்க ஒடுக்குமுறைகளும், சிறையில் நிகழ்த்தப்படும் வன்முறைகளும் கண்டிக்கத்தக்கது. தமிழ்நாடு, கர்நாடகா, அசாம் மற்றும் இதர இந்தி பேசாத மக்கள் மீது இந்தி மொழியை திணிக்கும் முயற்சியும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அரவணைத்து நாட்டின் சுயேச்சையான வெளியுறவுக் கொள்கையில் செய்யப்படும் கணிசமான நகர்வையும், பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேலிய காலனிய மற்றும் இனவெறி ஆக்கிரமிப்பை ஏற்பதையும் கண்டனத்துக்கு உரியதாகும்.

பொது விநியோக முறையின் சீர்குலைவு காரணமாக, பொதுமக்களை பாதித்து, அதிகரித்து வரும் விலைவாசி உயர்வை குறிப்பாக அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள் மற்றும் பருப்புகள் போன்றவை - கட்டுப்படுத்துவதில் அரசின் அலட்சியத்தை கண்டிக்கிறது. சர்வதேச சந்தையில் எண்ணெய் பொருட்களின் விலையிறக்கத்தை அடுத்து, பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை குறைப்பதற்கு பதிலாக, மானியம் முற்றிலும் ஒழிக்கப்படும் வரை ஒவ்வொரு மாதமும் சமையல் எரிவாயு விலையை உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது. ஒவ்வொரு நாளும் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயர்த்துவதன் மூலம் மக்களை கொள்ளையடிக்க பெரு நிறுவனங்களோடு கரம் கோர்த்து நிற்கிறது. அதிகரித்து வரும் கணினிவழி வர்த்தகம் மற்றும் பொருட்கள் பரிவர்த்தனை ஆகியவை அத்தியாவசிய பொருட்களின் இருப்பு மற்றும் விலை மீது எதிர்மறை தாக்குதலை ஏற்படுத்தியுள்ளன.

பாஜக அரசாங்கங்களால் ஆதரித்து வளர்க்கப்பட்ட வகுப்புவாத, பாசிச சக்திகளால் முன்னெடுக்கப்படும் பிற்போக்கு பிளவுவாத போக்குகளை கண்டிக்கிறது. பெண்களின் சுயேச்சைத் தன்மை மீது இந்த சக்திகள் கிட்டத்தட்ட யுத்தமே தொடுத்துள்ளன. அவர்களை சுரண்டுவதற்கான கருவியாகவும், பெண் ஊழியர்களை கட்டுப்படுத்துவதற்கான கருவியாகவும் பயன்படுத்தி இந்திய மற்றும் பன்னாட்டு பெருநிறுவங்களும், அரசாங்கங்களும் உட்பட முதலாளிகளால் இந்த பிற்போக்கு போக்குகள் வலுப்படுத்தப்படுகின்றன. பொது வாழ்வில் பெண்கள் வெளிப்படையாக பேசுவதற்கு எதிராக அவதூறுகளை அவிழ்த்துவிட்டும், பெண்களுக்கு எதிரான வன்முறையை அற்பமானதாக காட்ட முயற்சித்தும், குற்றவாளிகளை பாதுகாத்தும், பலியாட்களை குறை கூறியும், ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை ஆளும் கட்சி வளர்த்தெடுக்கிறது.

பாஜக ஆட்சியின்கீழ் கருத்து தெரிவிப்பதற்கும், எதிர்ப்பு காட்டுவதற்கும் உள்ள சுதந்திரத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களும் கண்டிக்கத்தக்கது. அரசாங்க கொள்கைகளுக்கு எதிரான கருத்து மாறுபாடு, ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடிப்படைவாத சிந்தாந்தத்திற்கான எதிர்ப்பு ஆகியவற்றை 'தேச விரோதம்' என்று சமன்படுத்தி காட்டப்படுகிறது. முற்போக்கு எண்ணம் கொண்ட மாணவர் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பகுத்தறிவு சிந்தனையாளர்கள் தாக்கப்படுகின்றனர். பிற்போக்கு, விஞ்ஞானபூர்வமற்ற கருத்துக்கள் வளர்க்கப்படுகின்றன. கல்வி நிறுவனங்களின் அதிகரித்து வரும் வணிகமயமாக்கம், ஆராய்ச்சி இருக்கைகளை குறைப்பது, கல்வி நிதி ஒதுக்கீட்டினை குறைப்பது ஆகியவை நிகழ்கின்றன.

ஆங்கிலேய காலனியாக்கத்திற்கு எதிராக போராடி, 70 ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திரத்தை பெற்ற நமது முன்னோர்கள், நமது நாட்டு மக்களின் அபரிமிதமான தியாகங்களை நினைவுகூர்கிறது. அவர்களது சாதி, இனம் அல்லது பாலினம் எதுவாக இருந்தாலும், எல்லா குடிமக்களுக்கும் சமத்துவ மான, கண்ணியமான வாழ்வை வாழக்கூடிய சமத்துவ சமூகமாக சுதந்திர இந்தியாவை அவர்கள் கருதிப் பார்த்தனர். இன்று, நமது குடிமக்கள் அனைவருக்கும் நமது அரசமைப்பு சட்டத்தால் உத்தர வாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் தற்போதைய பாஜக தலைமை யிலான அரசாங்கத்தால் இதுவரை இருந்திராத மோசமான அளவுக்கு தாக்கப்படுகின்றன. ஜனநாயகத் திற்கான இடம் குறுகி வருகிறது. ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கான இடம் பெருகி வருகிறது. கல்வி நிறுவனங்கள் உட்பட பல தளங்களில் அதன் ஆட்களின் ஊடுருவல் அதிகரித்து வருகிறது.

இந்த சூழ்நிலையில், உரிமைகளையும், நமது நாட்டையும், நமது ஜனநாயகத்தையும் மீட்டெடுக்க நாடு தழுவிய அளவில் இதர பகுதி உழைப்பாளி மக்களோடு இணைய வேண்டிய ஆகப் பெரிய கடமை நம் முன் வந்துள்ளது. எனவே, தொன்றுதொட்ட உரிமைகளும், வளமைகளும் குன்றிவிடாமல் காக்க, ஒன்றுபட்டு போர் புரிந்து உயர்த்தி பிடிப்போம் நமது பதாகையை! ◣

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.*
*பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடக செய்தி*

# பொங்கல் போனஸ் வழங்க வலியுறுத்தி 28.12.2018 அன்று தமிழகம் முழுவதும் 1000 இடங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தமிழக அரசு ஊழியர்களின் 'ஏ' மற்றும் 'பி' பிரிவினர் 30 ஆண்டு காலமாக பெற்று வந்த சிறப்பு மிகை ஊதியம் என்ற பொங்கல் கருணைத் தொகை கடந்த ஆண்டு தமிழக அரசு இரத்து செய்து உத்திரவிட்டது. ஏற்கனவே 21 மாத ஊதிய நிலுவை, ஓய்வூதியம் போன்ற உரிமைகளை இழந்திருக்கும் அரசு ஊழியர்களுக்கு அரசின் இத்தகைய செயல்பாடு மேலும் வேதனையை உருவாக்கியுள்ளது.

தமிழகத்தை ஆட்சி செய்த முன்னாள் முதல்வர்கள் தமிழர்களின் முக்கிய பண்டிகையான தை பொங்கல் திருநாளை அரசு ஊழியர்கள் உற்சாகத்தோடு கொண்டாடும் பொருட்டு தொடர்ச்சியாக வழங்கி வந்த கருணைத் தொகையை 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஊழியர்களுக்கு தற்போதைய அரசு மறுத்திருப்பது மிகப்பெரிய அநீதியும், அரசின் எதேச்சதிகார செயலுமாகும். மேலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மிகை ஊதியம் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையாக வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு ரூ.3000/- உச்சரவம்பு என நிர்ணயித்திருப்பதும் ஏற்புடையதல்ல.

மத்திய அரசு ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் ரூ.7000/- போனசாக அறிவிக்கப்பட்டு உச்சவரம்புத் தொகையும் ரூ.7000/- என உயர்த்தி வழங்கப்பட்டுள்ள நிலையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக எல்லா சலுகைகளையும் மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குகிறோம் என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழக அரசு இதுபோன்று மாநில அரசு ஊழியர்களின் உரிமையை பறிப்பது வேதனைக்குரியது.

கடந்த ஆண்டு இக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழக முதல்வருக்கு எங்கள் சங்கத்தால் முறையீடு செய்தபோதிலும் அரசிடமிருந்து எவ்வித அசைவும் இது நாள் வரை இல்லை. இது அரசு ஊழியர்கள் மத்தியில் மிகுந்த ஏமாற்றத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று 23.12.2018 சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசை வலியுறுத்தி 28.12.2018 அன்று தமிழகம் முழுவதும் 1000 இடங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திடுவது என்று முடிவாற்றப்பட்டது.

## கோரிக்கைகள்

1. தமிழக அரசில் பணிபுரியும் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஊழியர்களுக்கு 2017- 2018ஆம் ஆண்டுக்கு சிறப்பு மிகை ஊதியமாக (பொங்கல் கருணைத்தொகை) ரூ,3000/- வழங்கிட வேண்டும்.
2. தமிழக அரசில் பணி புரியும் 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்கு 2017-2018ஆம் ஆண்டுக்கு மிகை ஊதியமாக ஒரு மாத கால ஊதியத்தை உச்சவரம்பின்றி வழங்கிட வேண்டும்.

## ஜாக்டோ- ஜியோ ஆலோசனை

தருமபுரி மாவட்ட ஜாக்டோ- ஜியோ ஆலோசனைக் கூட்டம் தருமபுரி சிஐடியு அலுவலகத்தில் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர்கள் அரசு ஊழியர் சங்க மாவட்டதலைவர், எம்.சுருளிநாதன்,தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்டதலைவர் பி.எம். கௌரன், தமிழக ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் பொன்.ரத்தினம், ஆகியோர் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி மாவட்டதுணைதலைவர் பி.எஸ்.இளவேனில், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.யோகராசு, தமிழக ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர் கோ.காமராசு, தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாநில அமைப்புச் செயலாளர் ஆர்.செல்வம், தமிழக தமிழ் ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் ஆனந்தன், தமிழ்நாடு தொடக்கப்ப ள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் எம்.பழனி, தமிழ்நாடு அரசு பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் பாஸ்கர் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டச் செயலாளர் ஏ.செந்தில்குமார் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.*
*பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடக செய்தி*

# 2019 ஜனவரி 8-9 தேதிகளில் நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பங்கேற்பு

மத்திய அரசு கடைபிடித்துவரும் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கை இந்திய சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை பாதிக்கச் செய்துள்ளதுடன் உள்நாட்டு தொழில் வளர்ச்சி சமூக ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவையும் பாதிக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக நாடு தழுவிய அளவில் சமூக, பொருளாளதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளதுடன் அவற்றை பெரு முதலாளிகளுக்கு சாதகமாக்கியிருப்பதும், தொழிற் சங்கங்களை புறக்கணிப்பது என்ற போக்கும், தொழிலாளர்கள் மீதான தாக்குதல் நடத்துவது என்பதும் தொடர்கதையாகி வருவதுடன், கட்டுப்படுத்தப்படாத விலைவாசி உயர்வும், உச்சவரம்பு உயர்த்தப்படாத வருமான வரி, அத்தியாவசியப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரி/ தொழில் வரி போன்றவற்றாலும் அரசு ஊழியர் சமுதாயம் மிகபெரிய பாதிப்பை சந்தித்து வருகிறது.

சமூகப் பாதுகாப்பு திட்டமாக இருந்து வந்த ஓய்வூதியத் திட்டம் 2003ம் ஆண்டு முதல் விலக்கப்பட்டு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என்று அமல்படுத்தப்பட்டிருப்பதும், குறைந்தபட்ச ஊதியம் ரூ.18000/- என அனைத்து பிரிவு அரசு ஊழியர்களுக்கும் நிர்ணயிக்கப்படாததும், பல்வேறு கொத்தடிமை ஊதிய முறைகளில் அரசு ஊழியர்கள் நியமனம் செய்யப்டுவதும் தொடர்ந்து கொண்டுள்ளது.

இவையெல்லாம் மத்திய மாநில அரசுகளின் தவறான பொருளாதார கொள்கைகளின் வெளிப்பாடுதான் என உணர்ந்த வெகு மக்களின் தேசிய மேடை (NPMO) விடுத்துள்ள அறைகூவலுக்கிணங்கவும் பெங்களூர் நகரில் கடந்த நவம்பர் 26,27 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு தீர்மானங்களின் அடிப்படையிலும் கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மத்திய தொழிற்சங்கங்கள் எதிர்வரும் **2019 ஜனவரி 8-9 தேதிகளில் நடத்திடும் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் முழுமையாக கலந்துக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.**

## கோரிக்கைகள்

1. PFRDA சட்டத்தை கைவிட்டு புதிய ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாதாரர்களை முன் தேதியிட்டு வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொணர்க
2. ஒப்பந்த, தினக்கூலி மற்றும் புற ஆதார முறையில் பணியாற்றும் ஊழியர்கள்/ஆசிரியர்கள் பணிகளை வரன்முறைப்படுத்தி, அனைத்து காலிப்பணியிடங்களையும் சட்டபூர்வ நியமன விதிகளின் கிழ் நிரப்பிடுக
3. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த அத்தியாவசிய பொருட்கள், ஊக வணிகம் மூலம் விற்பனை செய்வதை தடை செய்து பொது விநியோக முறையை வலுப்படுத்த துரித நடவடிக்கை எடுத்திடுக
4. வேலையில்லா திண்டாட்டத்தை கட்டுப்படுத்த, உறுதியான நடவடிக்கைகள் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கிடுக

5. தவிர்த்தல், விலக்களித்தல் ஏதுமின்றி அனைத்து அடிப்படை தொழிலாளர் நலச் சட்டங்களையும் கறாராக அமல்படுத்துடுக. தொழிலாளர் நலச் சட்டங்களை மீறுவோர் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்திடுக.

6. அனைத்து தொழிலாளர்களுக்கும் முழுமையான சமூக பாதுகாப்பு வழங்கிடுக.

7. விலைவாசி குறியீட்டென்னுடன் இணைக்கப்பட்ட வழிவகைகளுடன் குறைந்தபட்ச கூலியாக மாதம் ரூ.18,000/- என நிர்ணயம் செய்திடுக.

8. அனைத்து உழைப்பாளிகளுக்கும் குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் ரூ.3,000/- என்பதை உறுதி செய்திடுக.

9. மத்திய / மாநில பொதுத்துறைகளின் பங்கு விற்பனைகளை கைவிடுக,

10. நிரந்தர பணியிடங்களின் ஒப்பந்த நியமனங்களை கைவிடுவதுடன், சமவேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்த ஊழியர்களுக்கும் நிரந்தர பணியாளருக்கும் வழங்கிடும் ஊதியம் மற்றும் நிலுவைகளை வழங்கிடுக.

11. போனஸ் மற்றும் வருங்கால வைப்பு நிதிக்கான தகுதி மற்றும் உச்சரம்பை நீக்குக, பணிக்கொடைத் தொகையை உயர்த்தி வழங்கிடுக.

12. விண்ணப்பம் அளிக்கப்பட்ட 45 நாட்களுக்குள் தொழிற்சங்கம் பதிவு செய்யப்படுவதை கட்டாயப்படுத்துக. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன தீர்மான எண்.ஊ-87மற்றும் ஊ-88ஐ ஏற்று நடைமுறைப்படுத்துக.

13. தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தம் செய்யப்படுவதை நிறுத்திடுக.

14. ரயில்வே, காப்பீடு மற்றும் பாதுகாப்பு துறைகளில் அந்நிய முதலீட்டை கைவிடுக.

# வாசகர் கடிதம்

*டிசம்பர் 2018 மாத இதழின் முன்அட்டை அரசியல் நகர்வையும் பின் அட்டை அரசுக்கு எதிரான அனல் வீசியதையும் காட்டியது. சங்கம் நமக்கானது மட்டுமல்ல மக்களுக்காகவும் என்பதை மீண்டும் கஜா புயலின் பாதிப்பில் உள்ள மக்களுக்கு உதவி செய்து நிறுபித்துள்ளார்கள். வெண்மணி தீ இன்றும் எங்கோ எரிந்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதில் தோழர் "இன்குலாப்" கவிதை உயிர்புடன் உள்ளது. தோழர்கள் ஏ.ட்டி.ஏ, சேகரன் கவிதைகளில் மனம் கனத்தது. நமது நடவடிக்கை பற்றி உயர்நீதி மன்றத்திற்கு தெரிந்தது போலவே, அரசுக்கும் போகப் போகத் தெரியும். மொத்தத்தில் இந்த இதழ் மிகவும் சிறப்பாக இருந்தது. பாராட்டுக்கள்.*

- ***சி. பாலசுப்ரமணியன்***,
நாகப்பட்டினம்.

# பணி ஓய்வு பாராட்டு




*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வந்தவாசி வட்டக் கிளை தலைவர் வ.செயராமன் சங்கப் பணி நிறைவு பாராட்டு விழா பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.*



# லெனின் காலத்திய அவர் பற்றிய படைப்புகள்

**பெரணமல்லூர் சேகரன்**

*ரஷ்யப் புரட்சியின் தாக்கம் காலனியாதிக்கத்தின் பிடியிலிருந்த நாடுகள் விடுதலை அடைய உந்துசக்தியாக இருந்தது எனின் மிகையன்று. அதற்கு ரஷ்யப் புரட்சி குறித்தும் அப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் குறித்தும் அக்காலகட்டத்தில் வெளியான படைப்புகளும் நூல்களும் பெரும் பங்காற்றின.*

இந்திய விடுதலைப் போராளிகள், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட, லெனினது உரைகளை, எழுத்துக்களை ஆர்வமுடன் கற்றறிந்தனர். மகாத்மா காந்தி, நேரு, ரவீந்திரநாத் தாகூர், மகாகவி பாரதியார், திரு.வி.க., சிங்காரவேலர் உள்ளிட்டோர் ரஷ்யப் புரட்சி குறித்தும் லெனின் குறித்தும் ஏராளமாக எழுதினர்.

ஆனால் மாமேதை லெனின் உயிருடனிருக்கும்போது சிலரே எழுதி வந்துள்ளனர்.

மராத்தி மொழியில் லெனினுடைய முதல் வாழ்க்கை வரலாறு 1922ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதை எழுதியவர் ராமகிருஷ்ண கோபால் பிடே என்பவர். அவர் பால கங்காதர திலகர் நடத்திய ஏடான 'கேசரி'யின் ஆசிரியர் குழுவில் 30 ஆண்டு காலம் பணிபுரிந்தவர். அதன் தலைப்பானது 'நிகோலாய் லெனின்: ரஷ்ய ஜனநாயகத்தின் ஸ்தாபகருடைய வரலாறு' என்பதாகும். கையெழுத்துப் பிரதி 1920ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டது. எனவே அது 1919ஆம் ஆண்டு வரையிலான சம்பவங்களை ஆராய்ந்தது.

நூலாசிரியர் அந்நூலில் "அது, ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கொடி கட்டிப் பறந்த நாட்களாகும்; இந்தியர்களாகிய நாங்கள் சுதந்திரத்திற்கான எங்களுடைய போராட்டத்திற்கான ஆதர்சத்தைப் பெற தெரிந்த ஒவ்வொரு ஆதாரத்தையும் நாடினோம்; லெனின் மற்றும் அவருடைய போல்ஷ்விக் ரஷ்யாவை விட சிறந்த ஆதாரம்

*வேறென்ன இருக்க முடியும்? ஆனால் அந்நாட்களில் இந்த ஆதாரங்கள் பொது மக்களுக்குத் தெரியாது; எனவே புரிபடாமல் இருந்தது; அந்தக் காரணத்திற்காகவே அது எங்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. லெனினுடையதானது ஓர் இணையற்ற தத்துவத்தோடு கூடிய புரட்சியின் முற்றிலும் புதிய பரிசோதனை என்று நாங்கள் உணர்ந்தோம்; அது நம்முடைய பண்டைக்கால தத்துவம் புகுந்திருந்த எங்களுடைய சிந்தனைக்கு ஒரு பெரும் ஈர்ப்பாக இருந்தது.*

*ஆனால் அந்நேரத்தில் ஒரு புத்தகத்தை எழுதுவதற்கான விவரங்கள் முற்றிலும் அற்பமாகவே இருந்தன; ரஷ்யாவிலிருந்து எந்தவொரு அதிகாரப்பூர்வ ஆவணமும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை; கேசரி அலுவலகத்திலும் நூலகத்திலும் கிடைத்த அன்னிய செய்தித்தாள்களும், இதர வார மாத ஏடுகளும் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிலிருந்து வந்தவையே.."*

இவ்வாறு லெனின் உயிரோடிருந்த காலத்திலேயே வெளிவந்த மராட்டிய வாழ்க்கை வரலாற்று நூலுக்குப் பின்னிருந்த வழிகாட்டும் சக்தி லோகமான்ய திலகரின் பிரதான தளபதிகளுள் ஒருவரும் டாடா எதிர்ப்பு முல்ஷி பேத்தா சத்யாகிரகத்தின் தலைவரும், மூன்று தலைமுறைகளாக எண்ணற்ற மகாராஷ்டிர இடதுசாரிகள், சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்டுகளின் வழிகாட்டி மற்றும் நண்பரும் மரியாதைக்குரியவருமான முதுபெரும் சேனாதிபதி பாபட்டே ஆவார். சேனாதிபதி பாபட்டிற்கு மற்றுமொரு சிறப்புமுண்டு. 1917ஆம் ஆண்டில் ரஷ்யாவின் மகத்தான நவம்பர் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெற்றது என்ற செய்தியைக் கேட்டவுடன் அவர் அதைப் பொறி மற்றும் வறுத்த பயறை வினியோகித்துக் கொண்டாடினார். (இவைதான் ஏழை மகாராஷ்டிரர்களின் நொறுக்குத் தீனி)

இங்கிலாந்திலிருந்தபோது, ஒரு ரஷ்யப் பெண்ணிடமிருந்து எவ்வாறு வெடிகுண்டுகள் தயாரிப்பது என்ற விபரத்தைத் தான் தெரிந்து கொண்டதாக சேனாபதி பட் நினைவு கூர்ந்துள்ளார். லெனினைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டது குறித்து அவர் மிகவும் வருத்தப்படுவார். அவர் லண்டனிலிருந்தபொழுது

**இந்திய விடுதலைப் போராளிகள், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட, லெனினது உரைகளை, எழுத்துக்களை ஆர்வமுடன் கற்றறிந்தனர். மகாத்மா காந்தி, நேரு, ரவீந்திரநாத் தாகூர், மகாகவி பாரதியார், திரு.வி.க., சிங்காரவேலர் உள்ளிட்டோர் ரஷ்யப் புரட்சி குறித்தும் லெனின் குறித்தும் ஏராளமாக எழுதினர்.**

லெனினும் அவர் வசித்த அதே கட்டிடத்தில் சில நாட்கள் தங்கியிருக்க நேர்ந்ததுண்டு.

1920ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17ஆம் தேதிய 'கேசரி' வார ஏடு 'லெனினுக்கு தார்மீக வெற்றி' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டது அதில்....

"போல்ஷ்வியம் என்பது ஒரு பொருளாதாரக் கொள்கை; ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அதை உருவாக்கியவர்கள் ரஷ்யப் புரட்சியுடன் தொடர்புடையவர்கள்; அதனால் அவர்கள் இங்கிலாந்தின் எதிரிகளாக கணக்கிடப்பட்டார்கள்; அந்தக் கோட்டைக் குறித்த தகவல்களைப் பெறுவது மற்றும் அதை விவாதிப்பது நீண்ட காலமாகவே ஒரு துணிச்சல்மிக்க மற்றும் ஆபத்தான கடமையாகக் கருதப்பட்டது.

லெனினுடைய வாழ்க்கை வரலாறு இந்தி மொழியில் 1921ஆம் ஆண்டில் வெளிவந்தது. "போல்ஷ்விக் ஜாதுகர்" (போல்ஷ்விக் மந்திரவாதி) என்ற தலைப்பில் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது. அதை எழுதியவர் ராம்சங்கர் அவஸ்தி என்பவர். அவர் கான்பூரிலிருந்து வெளிவந்த 'வர்த்மான்' என்ற இந்தி நாளிதழின் ஆசிரியர் ஆவார். அதன் முன்பக்கத்தில் லெனின் படம் அச்சிடப்பட்டு அதன்கீழே பின்வரும் வரிகள் இருந்தன.

"இவர்தான் லெனின். அசமத்துவத்தை அழிப்பவர் அவர். சோஷலிசத்திற்காக சிங்கம் போல் கர்ஜிப்பவர்".

***(லெனின் நினைவு நாள் : ஜனவரி 24)***

# சும்மா கிடைத்ததா?
# ஊதியமும் பாதுகாப்பான பணிநிலைகளும்

"கடந்த கால வரலாற்றை தெரிந்து கொள்ள விரும்பாத
அல்லது தெரிந்து கொள்ள தயாராக இல்லாத
எந்தவொரு சமூகமும் தன்னுடைய முகவரியை
தொலைத்து விடும்"

இன்று லட்சக்கணக்கான அரசு ஊழியர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் ஒரு கவுரவமான ஓரளவு பொருளாதார வசதி மிக்க வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அரசு ஊழியர் இயக்கம்தான். இந்தியாவில் ஊதிய நிலையில் 21வது இடத்தில் இருந்த நாம் இன்று 3வது இடத்தில் இருக்கிறோம். அலுவலக சூழலில் பல்வேறு மாற்றங்கள். எப்படி இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டது? நம் முன்னோடி தலைவர்கள் எண்ணற்ற தியாகங்கள் செய்ததன் விளைவாக நாம் இந்நிலையை அடைந்துள்ளோம். இதனை போராடி பாதுகாத்து நமது சந்ததிகளுக்கு கொடுத்து செல்வது நமது கடமை.

## முதல் சுதந்திரப் போர்

இந்தியா முழுவதும் தங்களது நிர்வாகத்தை விஸ்தரித்து கிழக்கிந்திய கம்பெனி ஆளுகையில் அதன் அரசு ஊழியர்கள் எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். குறிப்பாக, அதில் சிப்பாய்களாக பணியாற்றிய இந்தியர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் இடையே ஊதியத்தில் பெருத்த வேறுபாடு இருந்தது. இதனால் வெகுண்டெழுந்த இந்திய சிப்பாய்கள் 1857-ல் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினர். அப்போராட்டம் வரலாற்றில் முதல் சுதந்திரப் போர் என்றும், சிப்பாய் கலகம் என்றும் வெள்ளையர்களால் சொல்லப்பட்டன.

இந்திய குமாஸ்தார்களுக்கென்று தனி சட்டங்கள், நடத்தை விதிகள் உருவாக்கப்பட்டது. பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடாது, அதற்கு நிதி உதவியும் செய்யக் கூடாது. போராட்டத்தில் பங்கேற்பவர்கள் பற்றி அரசுக்கு தகவல் தர வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. அந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பிரிட்டிஷ் அரசின் இந்திய ஊழியர்கள் ராஜவிசுவாசத்தோடு மகாராணியின் மகிழ்ச்சிக்காக வேலை செய்து பிறவிப்பயனை அடைந்ததாக எண்ணினர். அதே நேரத்தில் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்படாத திப்பு சுல்தான் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் பணியாற்ற குமாஸ்தாக்கள் கண்ணியமாகவும், கவுரவத்தோடும் நடத்தப்பட்டார்கள்.

## வெள்ளையர் - இந்தியர் ஊதிய வேறுபாடு

பிரிட்டிஷ் - இந்திய ஊழியர்கள் மத்தியில் தங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் பாரபட்சமான நடவடிக்கைகள் கடும் கோபத்தை உருவாக்கியது. அதற்குக் காரணம் வெள்ளையர்களுக்கும், இந்தியர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த ஊதியத்தில் வேறுபாடு இருந்ததும், அவர்களுக்கு மட்டும் கோடை விடுமுறை போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டதுமே ஆகும். வெள்ளைக்கார குமாஸ்தாவிற்கு 5 ஷில்லிங்கும், இந்திய குமாஸ்தாவுக்கு வெறும் 5 ரூபாய் மட்டுமே ஊதியமாக வழங்கப்பட்டது. இதனால் இந்திய அரசுப் பணியில் இருந்த ஊழியர்களிடையே சங்கம் வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. வெள்ளையர்களின் சுரண்டல், அதிகார ஆவணப் போக்கு, அடக்குமுறைகள் நிலவி வந்த காலத்தில் நாடெங்கும் பெரும் பஞ்சமும், உணவு தட்டுப்பாடும் ஏற்பட்டது. இதன் காரணமாக இந்திய மக்களிடையே விடுதலை உணர்வு பொங்கி பெருகியது. இக்காலகட்டத்தில் முதல் உலகப் போர் 1914-ல் துவங்கி 1918 வரை நடைபெற்றது. போரின் காரணமாக மிகுந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

1917-ல் ரஷ்ய புரட்சி நடந்தேறியது. அங்கு லெனின் தலைமையில் பொதுவுடைமை அரசு ஆட்சிக்கு வந்ததன் மூலம் அதிகாரம் தொழிலாளர் கைக்கு வந்தது. அதன் விளைவாக உழைப்பாளி மக்களின் மீதான சுரண்டல் ஒழிக்கப்பட்டது. இந்நிகழ்வு உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

முதல் உலகப் போரின் முடிவில் "லீக் ஆப் நேஷன்ஸ்" அதன் துணை அமைப்பாக

"ஐ.எல்.ஓ." போன்றவை உருவாகின. இதன் காரணமாக உழைப்பாளி மக்களுக்கு சங்கம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் வந்து சேர்ந்தன. இப்பின்னணியில் 31.10.1920 அன்று Madras Non Gazetted Official's Union உருவானது. 3 ஆண்டுகளில் சென்னை மாகாணம் (கேரளா, ஆந்திரா, கர்நாடகா) முழுவதும் பரவியது. அன்றைய தினம் ஊழியர்களது ஊதியத்தில் 1929-ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 40% முதல் 18.75% வரை ஊதிய வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

இவ்வூதிய வெட்டை ரத்து செய்ய வேண்டுமென சங்கத்தின் சார்பில் அரசோடு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மொத்தம் 40,000 ஊழியர்கள் உள்ள நிலையில் உங்கள் சங்கத்தில் 5,000 பேர் மட்டுமே உறுப்பினராக உள்ளனர் எனும்போது நீங்கள் எப்படி கோரிக்கைகளை முன்வைக்க முடியும் என முதல்வர் ராஜாஜி கேட்டார்.

அதற்கு சங்கத் தலைவர்கள் 30 கோடி மக்கள் தொகை இருக்கின்ற நாட்டில் ஒண்ணரை லட்சம் காங்கிரஸ் உறுப்பினர்களின் சார்பாக நீங்கள் ஆட்சி செய்வது சரியென்றால் இதுவும் சரியே. ஊழயர்கள் சார்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் நியாயம் மட்டுமே என வாதிட்டனர். இக்காலகட்டத்தில் 1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப் போர் நடைபெற்றது. இப்போரில் வெற்றி பெற்றால் இந்தியாவுக்கு விடுதலை வழங்கப்படும் என பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வாக்குறுதி அளித்தது. இத்தகைய பின்னணியில் 18.2.1946-ல் இந்திய கப்பற் படையில் மகத்தான எழுச்சிமிக்க போராட்டம் நடைபெற்றது. 8.8.1946-ல் சென்னையில் 10 ஆயிரம் பேர் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. 25.8.1946-ல் நடைபெற்ற மாநில மாநாட்டில் 25 ஆயிரம் பேர் பங்கேற்றனர். ஒரு மாத காலத்தில் ஸ்டிரைக் நோட்டிஸ் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

## சுதந்திர இந்தியாவில் முதல் வேலை நிறுத்தம்

15.8.1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. 22.8.1947-ல் விசாகபட்டினத்தில் மாநாடு நடைபெற்றது. வேலை நிறுத்த தயாரிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டது. வேலை நிறுத்தம் தேவையா? தேவையில்லையா? என வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. 95% பேர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். 15.12.1947 முதல் 22.12.1947 வரை எட்டு நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தலைவர் ஜெகதீசய்யர் செயலாளர் அருளப்பன் ஆகியோருக்கு குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது. கூட்டம் நடத்த தடை விதித்து 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எஸ்மா சட்டத்தில் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சென்னையில் தடியடி நடத்தியதோடு கண்ணீர் புகைக் குண்டு வீசப்பட்டது. ஜெகதீச அய்யர் பணி நீக்கம் செய்யப்பட்டார். பல துறை சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மதராஸ் மாகாணாத்தில் நடைபெற்ற இந்த வேலை நிறுத்தம் நாடு முழுவதும் தொழிலாளர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 1950-ல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. "ஒரு கவுரவமான வாழ்க்கைக்கான ஊதியம் பத்தாண்டுகளில் எல்லா தொழிலாளிக்கும் வழங்கப்படும்" என அதில் சொல்லப்பட்டது. இன்றுவரை மதிப்பூதியம், தொகுப்பூதியம் ரத்து செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அடைய முடியவில்லை.

1957-ல் மத்திய அரசு முத்தரப்பு மாநாடு நடத்தியது. அதில் தொழிற்சங்க தலைவர்களும், தொழில் அதிபர்களும், மாநில நிதியமைச்சர்களும் பங்கேற்றனர். அதில் "அரசியலமைப்பு சட்டப்படி வாழ்க்கை ஊதியமோ - நேரு சொன்ன நியாயமான ஊதியமோ தர முடியாது எனவும், தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியம் என்ற ஒன்றை மட்டுமே கணக்கிட்டு அனைவருக்கும் வழங்கலாம் எனவும் மாநாடு ஏகமனதாக தீர்மானித்தது. ஆனால் நேரு அதனையும் வழங்கவில்லை. மாநாட்டு முடிவுகள் அரசை கட்டுப்படுத்தாது என்று முதலாளிகளை மகிழ்வித்தார். இன்று வரை அந்த ஊதியம் யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தோழர் எம்.ஆர்ஏ. அவர்கள் 1960ல் அரசு பணியில் சேர்ந்து 11 வருடங்களில் ஊழியர்களிடையே நம்பிக்கைக்குரிய தலைவராக பரிணமித்தார். 1974 அக்டோபர் 31-ல் சம்பள மறுப்பு போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டு தர்ணா போராட்ட வடிவம் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டது.

## பணி நீக்கங்கள் - பணி மாறுதல்கள்

போராட்ட தலைவர்களில் தேர்வாணையக் குழு ஊழியர் சங்கத் தலைவர் கண்காணிப்பாளர்

நிலையில் இருந்து தட்டச்சர் நிலைக்கு பணியிறக்கம் செய்யப்பட்டார். தோழர் கே.ஜி.க்கு ஆறு மாத ஊதிய வெட்டு. தோழர் என்.எல்.எஸ்.க்கு பதவி உயர்வு மறுப்பு. எம்.ஆர்.ஏ.வை டிஸ்மிஸ் செய்ய முயற்சி. தூத்துக்குடிக்கு மாற்றம். கருவூலத் துறை ராஜவேலு சென்னையில் இருந்து சிவகிரிக்கு மாற்றம். கருவூலத் துறை பாண்டியன் டிஸ்மிஸ் என ஏராளமான பழி வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிவ.இளங்கோ வாங்கிக் கொடுத்த அகவிலைப் படி பூஜ்ஜியம் என்ற வாசகம் கொண்ட சுவரொட்டியை ஒட்டியதற்காக தோழர் என்.எல்.எஸ். கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இது அரசு ஊழியர் வரலாற்றில் முதல் சிறைத் தண்டனை ஆகும். வருவாய்த்துறை அலுவலர் சங்கத் தலைவர் ஆர்.ஏ.கூடலிங்கம் தர்ணா போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். இதனைக் காரணம் காட்டி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு ஓய்வு பெறும் நாள் வரை சஸ்பென்ஷனில் இருந்தார். கொடைக்கானலில் கருவூலத் துறை சங்கத் தலைவர் நாகமணி புகை பிடித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்.

1978-80களில் கருவூலம், வணிகவரி, ஐடிஐ, மருந்தாளுநர், மருத்துவத் துறை, அமைச்சுப் பணியாளர், சுகாதாரத்துறை, வருவாய்த் துறைகளில் வேலை நிறுத்தங்கள் வெடித்துக் கிளம்பியது.

## அரசு ஊழியர் இதழ் துவக்கம்

இத்தகைய சூழலில் நாம் தனியாக அரசு ஊழியர் பத்திரிகையினை சங்கம் ஆரம்பிக்கும் முன்பே துவங்க முடிவு செய்தோம். நமக்கென்று ஒரு அமைப்பு இல்லாத நிலையில் (1981) அரசு ஊழியர் மாத இதழை அன்றைய மாநிலச் செயலாளர் அ.ராமசாமி மனைவியின் பெயரில் பதிவு செய்து துவங்கினோம். அரசாங்கம் தோழர் ராமசாமியின் மனைவிக்கு குற்றக் குறிப்பாணை வழங்கியது. அதற்கு அவர் “நான் மட்டுமே அரசு ஊழியர். எனது மனைவி அரசு ஊழியர் அல்ல. எனவே, அவருக்கு குற்றக் குறிப்பபாணை வழங்க எவருக்கும் அதிகாரம் இல்லை” என பதிலளித் தார். அப்படிப்பட்ட போராட்டத்தில் பிறந்த அரசு ஊழியர் மாத இதழை 2019ஆம் ஆண்டில் நமது உறுப்பினர் சந்தா இலக்கான 2 லட்சத்தை எட்ட வேண்டிய சூளுரையை நிறைவேற்ற வேண்டும்.

6.5.1984 மதுரை விக்டோரியா மகாலில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமானது. 27.5.1987-ல் அகில இந்திய கோரிக்கை நாள். 22.7.1987-ல் உண்ணாவிரதம். 17.9.1987 அகில இந்திய எதிர்ப்பு நாள். 2.11.1987 முதல் 12.11.1987 வரை வேன் பிரச்சாரம். 15.12.1987 வட்ட அளவிலான பேரணி. 9.1.1988 மாவட்ட அளவிலான பேரணி. 23.1.1988-ல் மதுரையில் ஆயத்த மாநாடு என தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டன.

10.2.1988-ல் அரசு ஊழியர் சங்கம் தன்னந் தனியாக வேலை நிறுத்தம் செய்தது. ஏறக்குறைய ஒரு லட்சம் ஊழியர்கள் 1989-ல் கடந்த கால போராட்டங்களில் பங்கேற்று வேலை நீக்கம் செய்யப்பட்ட தேனி நாகமணி, மதுரை அரிபிரசாத், கரூர் சுசிந்திரன், காஞ்சி ஜோதி ஆகியோருக்கு 9 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் பணி வழங்கும் ஆணை வழங்கப்பட்டது.

## போனஸ்

தமிழக அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் களுக்கு போனஸ் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் முதன்முதலில் முன்வைத்தது. அரசு ஊழியர் களுக்கு போனஸ் என்று நாம் குரல் கொடுத்த போது அது சாத்தியமா? போனஸ் என்பது தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழி லாளர்களுக்கு வழங்கப்படும் லாபத்தின் ஒரு பகுதிதான் வெள்ளை காலர் ஊழியர்களான அரசு ஊழியர்கள் அதை எப்படி கேட்க முடியும்? என்ற கேள்விக்கு அரசு ஊழியர் சங்கம் இக்கோரிக்கை யின்பால் உறுதியாக நின்று தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தியதன் விளைவாக அரசு ஊழியர்கள் போனஸ் பெற முடிந்தது என்பது வரலாற்று உண்மை. தற்போது ஏ மற்றும் பி பிரிவு ஊழியர்களை பிரிக்கும் சூழ்ச்சியில் அவர்களுக்கு போனஸ் மறுக்கப்பட்டுள்ளதையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராட்டப் பாதையில் பெற்றுத் தருவோம். 1992-ல் 5% தனி ஊதியம் பெற்றோர். அப்பேச்சுவார்த்தையின் போது சத்துணவு ஊழியர் பிரச்சனை பிரதானமாக தோழர் எம்.ஆர்.ஏ.வால் எடுத்துரைக்கப்பட்டு இன்று பல போராட்டங்களின் மூலம் கவுரவமான வாழ்க்கை வாழும் சத்துணவு ஊழியர்கள் பணியாற்றும் 2 ஆயிரம் மையங்களை மூடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நமது போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வோம்.

*19.3.2003-ல் ஓய்வூதிய பறிப்பு ஆணைகளை அன்றைய ஜெயலலிதா அரசு வெளியிட்டது. அதனை எதிர்த்த எஸ்மா, டெஸ்மா போராட்டம் (02.7.2003 முதல்) வரலாற்றுச் சிறப்புடன் அமைந்ததை நாம் அனைவரும் அறிவோம்.*

## ஓய்வூதியம்

*மத்திய, மாநில அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தமது பணிக்காலத்தில் சந்தித்து வரும் குறைவான ஊதியம், பணிப்பளு, பஞ்சப்படி வெட்டு, இடமாறுதல்கள், போனஸ் மறுப்பு போன்ற பல்வேறு சங்கடங்களை சகித்துக் கொண்டு பணியாற்றுவதற்கு காரணமே பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அந்திம காலம் வரை வாழ்க்கை நடத்துவதற்கு உத்திரவாதமான ஓய்வூதியத்திற்கு வேட்டு வைக்கும் "ஓய்வூதிய நிதி முறைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி ஆணைய மசோதா" என்ற பெயரில் ஒரு சட்ட முன்வடிவை 21.3.2005-ல் நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்தது. இந்த மசோதாவின் அம்சங்களை உள்ளடக்கிய அவசர சட்டம் ஒன்றை 30.12.2004 அன்று வெளியிட்டது. இதில் ஏற்கனவே உள்ள ஓய்வூதிய முறைக்கு பதிலாக 1.1.2004-க்கு பின்னர் "புதிய ஓய்வூதிய திட்டம்" திணிக்கப்பட வழிவகை செய்தது. (தமிழகத்தில் 9 மாதம் முன்பே 1.4.2003-ல் இருந்து)*

*உலக வங்கி* Averting the old age crisis *என்ற பெயரிலும், ஐஎம்எப்* Working Paper on Pension Reforms in india *என்ற பெயரிலும் வெளியிட்ட 2 ஆவணங்களிலும் ஓய்வூதியம் வழங்கும் பொறுப்பிலிருந்து அரசு வெளியேற வேண்டும் என்றும், ஓய்வூதிய நிதியை தனியார் மயமாக்கிட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை எதிர்த்து அன்றிலிருந்து எதிர்வரும் ஜனவரி 8, 9 தேதிகளில் நடைபெறும் வேலை நிறுத்தங்கள் வரை அயராத நமது போராட்டமும், பிரச்சாரங்களும், பங்கேற்பும் இந்த வேலை நிறுத்தம் கண்ணை விற்று சித்திரம் வாங்கும் மத்திய அரசின் போக்கை மாற்றும். வீட்டை கொளுத்தி சோறு சமைக்கும் கொடுமைக்கு முடிவு கட்டும். நாட்டை விற்று கடன் வாங்குவதை நிறுத்தம் செய்யும். நமது நீண்ட நெடிய போராட்டம் வெற்றியின் பாதையை தீர்மானிக்கும். இந்திய நாட்டில் நம்மைப் போன்ற பாதிக்குள்ளாகியிருக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், வேலை இல்லா இளைஞர்களின் ஒற்றுமையை உருவாக்கும் பெரும் படையாக மாறும். இதுவரை நாம் பெற்றுள்ள உரிமைகளை அரசின் கரங்களிலிருந்து வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டதுதான் என்ற கூற்றை உருவாக்கிய தோழர் எம்.ஆர்.அப்பன் நினைவு நெஞ்சிலேந்தி*

*"பாரத நாடு பழம்பெரும் நாடு*
*நீரதன் புதல்வர் அந்நினைவகற்றாதீர்"*

*என்றான் பாரதி. அந்த தேசபக்த உணர்வோடு வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச்செய்வோம்.*

*இன்குலாப் ஜிந்தாபாத்*

*தொழிலாளர் ஒற்றுமை ஜிந்தாபாத்.*

**- எஸ்.தமிழ்ச்செல்வி**

---

## உள்ளேன் ஐயா!

*ஜாதி ... உள்ளேன் ஐயா!*

*மதம் .... உள்ளேன் ஐயா!*

*கொலை ... உள்ளேன் ஐயா!*

*கொள்ளை ... உள்ளேன் ஐயா!*

*களவு ... உள்ளேன் ஐயா*

*கற்பளிப்பு ... உள்ளேன் ஐயா!*

*வஞ்சம் .... உள்ளேன் ஐய!*

*ஊழல் ... உள்ளேன் ஐயா!*

*லஞ்சம் .... உள்ளேன் ஐயா!*

*துரோகம் ... உள்ளேன் ஐயா!*

*பஞ்சம் .... உள்ளேன் ஐயா!*

*பசி .... உள்ளேன் ஐயா!*

*பட்டினி ... உள்ளேன் ஐயா!*

*மூட நம்பிக்கை ... உள்ளேன் ஐயா!*

*வெண்மணி ... உள்ளேன் ஐயா!*

*அட்டனஸ் எடுத்தாச்சு...*

*இன்னைக்கு நாம படிக்கப்போற பாடம்*

*இந்திய நாட்டின் உடனடி தேவை ....*

*உலகில் உயர்ந்த கோட்சே சிலை*

**- நாகை ஏ...ட்டீ...ஏ**

# மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத் துறையில் புதிய நியமன முறைகளும், ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சனைகளும்

இந்தியாவில் 1991-க்கு பிறகு அமுலாகிவரும் உலக மயம், தாராளமயம், தனியார்மயக் கொள்கைகள், மத்திய அரசை பின்பற்றி மாநில அரசுகளும் அதே திசைவழியில் பின்பற்றுவதன் மூலம் பல துறைகளிலும் அதன் விளைவுகள் சாதாரண மக்களையும், அரசுத் துறையில் பணிபுரியும் ஊழியர்களையும் பாதித்து வருகிறது. இதற்கு மருத்துவத் துறையும், பொது சுகாதாரத் துறையும் விதிவிலக்கல்ல. தமிழக அரசில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் பல்வேறு பாதகமான மாற்றங்கள் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, மக்கள் நல்வாழ்விற்கு வழங்கப் படும் சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிகள் பல திட்டங்களாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் சிறப்பான தோற்றமாக உருவானாலும் எந்த சமயமும் ஒரு திட்டத்தை அரசு கைவிடுவதற்கு வசதியாக இந்த ஏற்பாடு அமைகிறது. உதாரணத்திற்கு ஒரு காலத்தில் தொழுநோய் ஒழிப்புத் திட்டம் என்ற தனி திட்டமாக இருந்தது. பின்னர் பெயரளவுக்கே செயல்படும் திட்டமாக பொது சுகாதாரத் துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அரசு திட்டங்களை தனித்தனியாக அறிவித்து செயல்படுத்தி வருவது ஒருபுறமிருந்தாலும், இதில் பணியாற்றும் அல்லது நியமிக்கப்படும் முறை "கொத்தடிமை முறையை" நினைவூட்டக் கூடிய வகையில் உள்ளது. எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், கண் பார்வை சிறப்பு தடுப்பு சங்கம், காசநோய் கட்டுப்பாட்டு சங்கம், நோயாளிகள் நலச் சட்டம் என்ற பெயரில் இயங்கும் திட்டங்களில் பணியில் அமர்த்தப்பட்டிருப்போர் தொகுப்பூதியத்தில் பணிபுரிகின்றனர். மருத்துவத் துறையில் மக்களுக்கான சேவைப் பணிகள் நிரந்தரமாக தேவைப்பட்டாலும் இதற்கான பணியில் அமர்த்தப்படுவோர் மட்டும் நிரந்தர மின்றி முறையான அரசு ஊழியர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் நியமிக்கப்படாமல் குறைந்த கூலிக்கு நியமிக்கப்பட்டு உழைப்பை சுரண்டும் முதலாளித்துவ மனப்பான்மையை அரசு பின்பற்றி வருகிறது.

இதேபோன்றுதான் மருத்துவம் மற்றும் சுகாதார துறையில் அடிப்படை பணியாளர்கள் முதல் மருத்துவ தொழில்நுட்ப பணியாளர்கள் வரை தனியார் ஏஜென்சிகளான பத்மா கம்பெனி, கிரிஸ்டல், ஏகம் பவுண்டேசன், தாய்ஸ் போன்ற எண்ணற்ற கம்பெனிகள் தனியார் முகமை என்ற பெயரால் சுகாதார பணியாளர் ரூ.8000 (ரூ.6000) கையில் பெறுவது கூலிக்கு அடிப்படை பணியாளர்கள் பல்நோக்கு சுகாதார பணியாளர், மருத்துவமனை பணியாளர் (ஹவுஸ் கீப்பிங்) என்ற பெயரில் ஆயிரக்கணக்கானோர் நியிமக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வார விடுமுறை கிடையாது. எந்த நாளிலும் வேலையை விட்டு வெளியேற்றப்படும் நிலை யில் உள்ளனர். அதேபோன்று சுகாதாரத் துறையில் தேசிய நகர்ப்புற நலத்திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம், பள்ளி நல நடமாடும் மருத்துவ திட்டம் இவைகள் மூலம் குறைந்த கூலிக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் நியமிக்கப் படும் இவர்கள் மாதம் ரூ.1500க்குகூட வேலைக்கு செல்லும் சூழ்நிலை உள்ளது. எந்த வேலை பாதுகாப்போ, முறையான ஊதியமோ இன்றி உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதேபோன்றுதான் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் பணிபுரியும் பேக்கர்ஸ், இதர மருத்துவ தொழில்நுட்ப ஊழியர்கள், தினக்கூலி தொகுப்பூதியம் பெற்று வருகின்றன. இதே போன்றுதான் 108 வாகனத் திட்டத்தில் பணி புரிவோரும் தனியார் ஏஜென்சி மூலம் பணி யமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால், முன்மாதிரியாக இருக்க வேண்டிய அரசு "அரைக் காசு உத்யோகமென்றாலும், அரசு உத்தியோகம்" என்கிற முன்மாதிரியை அடித்து நொறுக்கி நவீன கொத்தடிமைகளாக அமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலை

ஒருபுறம் இருந்தாலும் இத்துறை ஊழியர்கள் சங்கம் அமைத்து தங்களது உரிமைக்கான குரலை முழங்கத் துவங்கியுள்ளது நல்ல துவக்கமாக உள்ளது.

வசதியுள்ளவன் தரமாட்டான் வயிறு பசித்தவர் விடமாட்டான் என்பது போல் இப்பகுதி ஊழியர்கள் ஒன்றுபட்டு வருகின்றனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் இவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி வருகிறது.

சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும், முறையான ஓய்வூதியம் வழங்க வேண்டும், பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும், சங்கம் அமைக்கும் உரிமை, போராடும் உரிமைக்காக இத்திட்டங்களில் பணிபுரியும் ஊழியர்கள் விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். உரிமைக் கான வாழ்வாதாரத்திற்கான போராட்டத்தை முன்னெடுப்பார்கள். அரசின் கொள்கைக்கு எதிராகவும் போராட தயாராவார்கள் என்கிற நம்பிக்கை களநிலைமை நமக்கு வெளிப்படுத்து கிறது. இதற்கு தோழமையாக, அரணாக இத்துறையில் நிரந்தர பணியில் உள்ள துறைவாரிச் சங்கங்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கடமையாக முன்னெடுத்துச் செல்வோம். வெற்றி என்றும் போராடுபவர்களுக்கே.

## ஒன்றே... நன்றே...

அம்மன் ஆலய அன்னம்
அன்னத்தை இட்டது கன்னம்
கன்னம் காரணம் மோதல்
முன்னம் அறியா சாதல்

பகுத்துண்ணக் கரைவன
எடுத்துண்டு மாண்டன
காக்கை குருவி எங்கள் சாதி
யாக்கை மானுடர்கள் மோதி
பறித்தனர் சாமானியர் உயிர்
மரித்தவர் வழங்கியதோ துயர்

வழக்கம் போல் கல்லாய் சாமி
இழப்பிலும் விதியெனும் ஆசாமி

பலிகளின் தொடர்கதை
முடிவிலா நெடுங்கதை
மூடநம்பிக்கை அறி அதை

அரிதான மானுட உயிர்
எரித்தது ஆன்மீகத் துயர்

உருவாகும் பகுத்தறிவு ஒன்றே
எருவாகும் வாழ்க்கைக்கு நன்றே

செய்யும் தொழிலே தெய்வம்-எனில்
உய்யும் மானுடம் வெல்லும்

- **பெரணமல்லூர் சேகரன்**

*(கர்நாடகாவில் ஆலயப் பிரசாதம் உண்டு 14 பேரும் 60 பறவைகளும் உயிரிழந்தனர்)*

## கவிதை தலைப்பு

ஆட்டுக்கறி வேணாங்கிறான் மாட்டுக்கறி
வேணாங்கிறான் மனுசங்கறி
வேணுமுங்கிறான் - தம்பி மதவெறிய
உண்டு பண்ணுறான்
(ஆட்டுக்கறி)

என்ன சோறு சாப்பிடனும் எந்த துணி
போட்டுக்கனும் எல்லாமே நாங்க
சொல்லுவோம் மனுசங்கள நாங்க
கொல்லுவோம் (2)

பொருளை எங்க வாங்கிடனும்
எப்ப நீங்க தூங்கிடனும்
சட்டம் போட்டு நாங்க சொல்லுவோம் பல
திட்டம் போட்டு பணத்தை அள்ளுவோம்... (2)
(ஆட்டுக்கறி)

மண்ணும் மலையும் சாகடிப்போம்
பஞ்சபூதம் பாழடிப்போம் வறுமையில
நாங்க தள்ளுவோம் இதை பெருமையாகக்
கூறி கொள்ளுவோம் (2)

படிச்சாலும் வேலை இல்ல
உழைக்க நல்ல பூமியில்ல
தந்தாங்க நல்ல சுதந்திரம்
பசியோடு நாங்க நிரந்தரம் (2)

கருத்துரிமை சாகடிப்போம்
சகலத்தையும் சீரழிப்போம்
இதுதான்டா மோடி மந்திரம்
பண முதலாளி கூறும் தந்திரம் (2)
(ஆட்டுக்கறி)

- **வே. கிருஷ்ணமூர்த்தி**, கடலூர்

# கஜா புயலின் கோர தாண்டவம்

கஜா புயல் நிகழ்த்திய கோரதாண்டவம் டெல்டா மாவட்டங்களை புரட்டி போட்டன. கண்இமை நொடிக்குள் எல்லாம் முடிந்துவிட்டன. ஏக்கர் கணக்கில் தென்னை வாழை தோப்புகள் வேரோடு சாய்ந்தன. வீடுகள் தரைமட்டமாகி மண்ணோடு மண்ணாகி போகின. மின்கம்பங்கள் அடியோடு வீழ்ந்தன. டெல்டா மாவட்டங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாமல் இருளில் மூழ்கி தீவுகளாயின.

டெல்டா வாழ்மக்கள் சொந்த மண்ணில் அகதிகளாயினர். பலர் தங்களின் இன்னுயிர் இழந்துள்ளனர். எத்தனையோ புயல்களை சந்தித்த டெல்டா மாவட்டங்கள் ‘கஜா புயல்’ விளைவித்த மோசமான விளைவுகளை இதுவரை சந்தித்த தில்லை. கதி கலங்கியுள்ளனர். தங்களின் வாழ்வாதாரம் ஒட்டுமொத்தமாக சீரழிந்து விட்டன. “இழந்த வாழ்வாதாரம் சீராக எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?” என்று மக்களின் கதறல்கள் கேட்டு பார்வையிட வந்த கஜா புயல் மத்திய அரசு மதிப்பீட்டுக் குழுவினரே கண்கலங்கி நின்றனர் என்றால் மக்களின் வாழ்வாதாரத்தை கஜா புயல் எந்தளவுக்கு சின்னாபின்னப்படுத்தி யுள்ளது என்பதை விவரிக்க இயலாது.

தாங்கள் கற்பனை செய்ததைவிட மோசமான பாதிப்புகளை டெல்டா மாவட்டங்கள் சந்தித் துள்ளன என மத்திய மதிப்பீட்டுக் குழவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் கஜா புயல் நிவாரணப் பணிகளுக் காக தமிழக அரசு கோரிய போதுமான நிதியை மத்திய அரசு வழங்காதது டெல்டா மாவட்ட மக்களுக்கு கஜா புயல் எற்படுத்திய வேதனையை விட அதிகமான வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாது.

கஜா புயலின் மோசமான விளைவுகளை ஊடகங்களில் - கைப்பேசி தகவல்களில் - பத்திரிகைகளின் மூலம் அறிந்த டாம்சா தோழர்கள் மாநில மையத்தின் வேண்டுகோளுக்கு முன்பே, தங்கள் மாவட்டங்கள் மூலம் நிவாரணப் பொருட்களை திரட்டி அனுப்பி வைத்தது பாராட்டுக்குரியது.

முதன்முதலில் முன்னாள் டாம்சா மாநிலச் செயலாளர் சுதர்சனம் மற்றும் வேளாண் பொறியியல் துறை ஊழியர்களும் அலுவலர் களும் கஜா புயல் நிவாரண நிதிகள் வழங்கி துவக்கி வைத்தனர்.

குறிப்பாக திருவாரூரில் மாநிலச் செயலாளர் சுதாகர் கஜா புயல் பாதித்த பகுதிகளில் புயலை விட வேகமாக சுழன்று நிவாரணப் பொருட்கள் திரட்டி டாம்சா மற்றும் அரசு ஊழியர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு சமைத்து பரிமாறியதும் நிவாரணப் பொருட்கள் வழங்கியதும் நமது சங்கத்தின் மீது மக்களுக்கு மதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள் ஒரு வேன் முழுவதுமாக நிவாரணப் பொருட்கள் அடங்கிய வேனை தூத்துக்குடி வேளாண்மை இணை இயக்குநர் (பொ) கொடி அசைத்து அனுப்பி வைத்தது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம், நமது துறையில் உள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர் களுக்கு மேலோங்கி உள்ளது என்பதற்கு உதாரணமாகும்.

அதேபோல் உதகை டாம்சா மாவட்ட தோழர்கள் ஒரு லாரி முழுவதும் உணவுப் பொருட்கள், போர்வை, காய்கனிகள் மற்றும் இதர பொருட்களை திரட்டி தோட்டக்கலை இணை இயக்குநர் கொடி அசைத்து வைக்க தஞ்சைக்கு கொண்டு வந்தனர். மாநில பொதுச் செயலாளர், மாநிலத் தலைவர் மற்றும் தஞ்சை மாவட்ட அரசு ஊழியர் சங்க தோழர்களுடன் இணைந்து கொண்டு வந்த நிவாரணப் பொருட் களை சரிசமமாக பிரித்து அதனை மக்களுக்கு பகிர்ந்தளித்த பாங்கு பட்டுக்கோட்டை மக்களுக்கு நெகிழ்வினை ஏற்படுத்தின.

வேலூர் மாவட்டத் தோழர்களும் மெழுகு வர்த்தி போன்ற நிவாரணப் பொருட்கள் வழங்கியுள்ளனர்.

தஞ்சை மாவட்ட டாம்சா மற்றும் அரசு ஊழியர் சங்கத் தோழர்களுடன் இணைந்து நிவாரண பொருட்களை திரட்டி கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்க வாய்ப்பு கிட்டியது நெகிழ்வை தந்தன.

நிவாரணப் பொருட்கள் வழங்கி உதவிக்கரம் நீட்டிய அனைத்து மாவட்ட டாம்சா நிர்வாகிகள் மற்றும் முன்னணி தோழர்கள், அரசு ஊழியர்கள்

அனைவருக்கும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப் படுகிறது.

கஜா புயல் நிவாரணப் பணிகளில் தமிழக அரசு அதிகாரிகள், அரசு ஊழியர்களின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது. குறிப்பாக சாய்ந்த மின் கம்பங்களை சரி செய்ய இரவு பகல் பாராது உழைத்த மின் ஊழியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எனினும் தமிழக அரசு மத்திய அரசுக்கு போதிய அழுத்தம் தந்து உரிய நிதி பெற்று நிவாரண பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்பது நமது கோரிக்கை மட்டுமல்ல மக்களின் எதிர்பார்ப்புமாகும்.

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க உத்தரவிட்டிப்பது பொதுமக்களைப் போல நாம் எதிர்பார்த்த ஒன்றுதான். இந்த ஆலையை மூடக்கோரி மே 22 அன்று நடைபெற்ற பேரணியில் காவல் துறையினர் நடத்திய அராஜக துப்பாக்கிச் சூட்டில் 13 அப்பாவி குடிமக்கள் தங்களது இன்னுயிரை இழந்ததுதான் மிகப்பெரிய துரதிர்ஷ்டம். மக்களின் உயிருக்கு அவ்வளவுதான் மதிப்பா?

மக்களின் உயிர்களை குடித்த பின்பும் ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகத்தினருக்கு மனமாற்றம் ஏற்படவில்லை என்றால் ஸ்டெர்லைட் ஆலைய நிர்வககத்தினரின் வக்கிர புத்தியை தமிழக அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழக அரசு இனிமேலாவது விழித்துக் கொள்ள வேண்டும். தமிழக முதல்வர் ஸ்டெர்லைட் ஆலையை திறக்க விட மாட்டோம் என்று ஊடகங்களில் சொல்வது மக்களுக்கு ஆறுதலாக இருந்தாலும், அதற்குரிய உறுதியான சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவது மக்களின் எதிர்பார்ப்பிற்கான நிரந்தரத் தீர்வாகும்.

ஊழலை ஒழிப்பேன், கருப்பு பணத்தை ஒழிப்பேன் என்று கூறி மத்தியில் ஆட்சிக்கு வந்தது பாஜக. ஊழலுக்கும் கருப்புப் பணத்திற்கும் ஏதோ சாமானிய மக்கள் ஏழை, எளிய மக்களுக்குதான் நெருங்கிய தொடர்பு இருப்பது போல் மத்திய அரசு கெடுபிடி காட்டுகிறது. வங்கிகளில் பெரும் முதலாளிகளால் வாங்கப் பட்ட கடனை திருப்பி வசூலிக்க இயலாத மத்திய அரசு சிறுகுறு விவசாயிகள் வாங்கிய கடன் களால்தான் வாராக் கடன்கள் அதிகரித்துள்ளது என்று அதனை வசூலிக்க பல்வேறு நெருக்கடி யான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நிலுவையில் உள்ள வாராக் கடன்களை வசூலிக்கும் வரை வங்கி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை என மத்திய அரசு அறிவித் திருக்கிறது. சாமானிய மக்களிடம் கடன்களை வசூலிக்க காட்டும் நெருக்கடியில் 1% கார்ப்பரேட் நிறுவனங்களிடமும் பெரும் முதலாளிகளிடம் காட்டினால் என்ன என்று சமானியரின் கேள்வி மத்திய அரசின் செவிகளில் விழவில்லை.

டெல்லியில் விவசாய கடன்களை ரத்து செய்ய வலியுறுத்தி நடைபெற்ற விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையினை மத்திய அரசு கொஞ்சம்கூட கண்டுகொள்ளாதது விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

அதனால்தான் சமீபத்தில் நடைபெற்ற 5 மாநில தேர்தல்களில் மத்தியில் ஆளும் பாஜக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன. இனி மத்திய அரசு விழித்துக் கொண்டாலும் 5 மாநில தேர்தல்களில் மத்திய அரசு சந்தித்துள்ள வெற்றிகரமான தோல்வியே சாமானிய மக்கள் ஏமாற தயார் இல்லை என்பதை உணர்த்துகிறது.

புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து, 21 மாத நிலுவைத் தொகை வழங்குதல், ஊதிய முரண் பாடுகள் கலைதல் உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் 4.12.2018 முதல் ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்தம் என்ற முடிவினை அறிவித்து பிரச்சார இயக்கங்கள் நடைபெற்றன.

மாண்புமிகு அமைச்சர் ஜெயகுமார் மற்றும் அதிகாரிகள் 30.11.2018 அன்று ஜாக்டோ-ஜியோ போராட்டக் குழுவினரை தலைமைச் செயலகத் தில் அழைத்துப் பேசினர். பேச்சுவார்த்தையில் அரசு தரப்பில் எந்தவித உறுதியும் அளிக்கப் படாததால் வேறு வழியின்றி காலவரையற்ற போராட்டத்தை துவக்க வேண்டிய நிலை ஜாக்டோ-ஜியோ போராட்டக் குழுவினருக்கு ஏற்பட்டது. அனைத்து இயக்கமும் அதில் ஒரு அங்கம் என்பதால் தங்களை இணைத்துக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டது.

இதற்கிடையில் போராட்டத்திற்கு தடை விதிக்கக் கோரி வழக்கு மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்டது. அரசு தரப்பு - போராட்டக் குழுவினர் தரப்பு வாதங்களை கேட்ட நீதிமன்றம் போராட்டத்திற்கு தடை விதிக்க மறுத்துவிட்டது. இதிலிருந்து நமது போராட்டம் நியாயமானது என்பது நீதிமன்றத்தின் மூலம் நிரூபணமானது.

எனினும், நீதிமன்ற வேண்டுகோளை ஏற்று ஜாக்டோ-ஜியோ போராட்டக் குழுவினர்

காலவரையற்ற போராட்டத்தினை 10.12.2018 வரை தள்ளிவைக்க சம்மதித்தது. மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது நமது கோரிக்கைகள் தொடர்பாக நீதிமன்றம் அரசுக்கு கொடுத்துள்ள நிபந்தனைகள் அடிப்படையில் தற்பொழுது வருகிற 7.1.2019 வரை ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற போராட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, தோழர்களே எந்தத் தடைகள் வந்தாலும் அதனை எதிர்கொள்வோம் என்ற உறுதியிலிருந்து இம்மி அளவு பிசகாமல் வெற்றி இலக்கை அடையும் வரை நமது பயணத்தை தொடர்வோம். அதனையே நமது லட்சியமாக கொள்வோம்.

**- இரா.பன்னீர்செல்வம்**

## பங்கேற்பாய் தோழியே!

தொழிலாளர்களின் - உழைப்பாளிகளின்
உரிமை கேட்கும்
அகில இந்திய வேலை நிறுத்தம்
வெறும் விருப்பமாக மட்டும்
வெளிப்படுவது போதுமா?

அது செயலாய் - களத்தில்
உன்னிடம் மலரும் நாள் எது?
ஜனவரி எட்டும் - ஒன்பதும் சொல்கின்றது

மத்திய, மாநில அரசு ஊழியர்களை
முற்றிலும் பங்கேற்க செய்வதே
வேலை நிறுத்தம் என்பது.

உண்மைதான் - ஆனால்
அதற்கு முதலில் உன்னை மாற்றுதல்
வேண்டுமென்பதை உணர்வாயா?

அரசு, அதிகாரி என்ற உருவில்
சலுகை வடிவாய் முதலாளித்துவ வாழ்க்கை
உனக்கு வழங்கப்படும் போதும்

இந்த அரசு இல்லையெனில் - வரும் அரசு
செய்யும் என்ற தனியுடைமை - உன்னை
நெருங்கும் போதும்

எதிர்த்துப் போராட தயங்குபவர்க்கும்
எப்படி கிடைக்கும்
ஜிபிஎப் என்ற நறுமணம்

ஊழியர்களின் உரிமைகளுக்காய்
உறவாட அனுமதிக்காத கார்ப்பரேட்டும்,
போராடும் தொழிலாளி வர்க்கத்தை

அழைத்துப் பேசாத மத்திய, மாநில அரசுகளும்
இவற்றை தட்டிக் கேட்க துணியாதவர்களுக்கு
எப்படி கிடைக்கும்?

காலிப் பணியிடம் நிரப்பிட்ட
பலம் - சிலர் வேத வாக்காய்
சொல்வதைப் போல் - பெண்ணே

நீ பொருளாதார தேவைக்கு மட்டும்
அலுவலகம் செல்! - கரன்சிக்காக...
கண்ணில் படும் கொடுமைகளை
எதிர்த்து மட்டும் பேசி விடாதே!

உனக்கு நேரும் இழிசொல்லையும்
வெளியில் சொல்லாதே - உன் வேலை
வீடு கூட்டு, சோறாக்கு, துணி துவை
பிள்ளைக்கு கால் கழுவி - என்ற மந்திரத்திற்கு
நீயே தடுப்பு வைத்து

யாரோ போராடி பெற்றுக் கொடுப்பதில்
உறுத்தலின்றி, பணி செய்பவர்களுக்கு
எப்படி கிடைக்கும்
தொகுப்பூதிய ரத்து என்ற நன்னெறி

2019 என்ற புத்தாண்டை வரவேற்கும்
உங்களிடம் - அரசு ஊழியர் சங்கம்
வேண்டுவது இதைத்தான்

தயவு செய்து நாம் போகாவிட்டாலும்
போராட்டங்கள் நடக்கும் - என்ற பழைய
உணர்ச்சிகளுக்கு சலுகை வழங்காதீர்கள்

நியாயமான போராட்ட கடமைகளுக்கு
தடையாய் வரும் எந்த அரசையும்
எதிர்க்கக் தயங்காதீர்கள்

தன் சுகம் மறுத்து துடித்துக் கொண்டிருக்கும்
தோழர் எம்.ஆர்.ஏ. உள்ளிட்ட தலைவர்களின்
இதயத்தின் தீராத ஆசை கேட்கிறதா? -
உங்கள் செவிகளுக்கு

பெண் ஊழியர்களின் பங்கேற்பே உறுதியானதென்று
அன்புத் தோழியே
போராட்டப் பாதைக்கு இடம் கொடுங்கள்
நிச்சயம் நாமே வெல்வோம்.

**- எஸ்.தமிழ்ச்செல்வி**

# ஜாக்டோ-ஜியோ விளக்கக் கூட்டம்

கடந்த 04.12.18 முதல் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு (ஜாக்டோ - ஜியோ) சார்பில் காலவரையற்ற வேலைநிறுத்தம் அறிவித்து செயல்படுத்த ஆயத்தமான நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வேலை நிறுத்தம் செய்ய தடை கோரி வழக்கு வந்த நிலையில் அதில் தலையிட்டு வேலை நிறுத்தத்தை ஒத்திவைக்க ஜாக்டோ - ஜியோ ஒருங்கிணைப்பாளர்களிடம் வேண்டுகோள் வைத்தது. அதனை ஏற்று வேலைநிறுத்தம் ஒத்தி வைக்கப்பட்டது. இது குறித்த விளக்கக் கூட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

## தருமபுரி

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்டத் தலைவர் பி.எம்.கௌரன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் பொன்.ரத்தினம், தமிழாசிரியர் கழக மாநில அமைப்புச் செயலாளர் இராசா.ஆனந்தன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் கே.பாஸ்கரன் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் எம்.பழனி ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் வரவேற்றார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கினைப்பாளருமான மு.அன்பரசு சிறப்புறை யாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி, உயர்நிலை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.இளங்கோ, தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் கொ.எசோந்திரா, தமிழ்நாடு உயர்நிலை-மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் லைவர் பி.துரைராஜ், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.பொற்கொடி அரசு பணியாளர் சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் அ.பெரியசாமி, பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், வேளாண் அமைச்சு பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.யோகராசு, அரசு ஊழியர் சங்க மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ஜி.பழனியம்மாள், உளிட்ட பல்வேறு துறைச் சங்கத்தின் தலைவர்கள் கோரிக்கையை விளக்கி பேசினர்.

## திண்டுக்கல்

முபாரக் அலி தலைமையில் நடைபெற்றது. சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். உயர் மட்ட குழு உறுப்பினர் அன்வர் வாழ்த்துரை வழங்கினார். ச.மோசஸ் சிறப்புரை வழங்கினார். 15.12.18 காலை திண்டுக்கல் தமிழ் நாடு வருவாய் துறை அலுவலர்கள் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

## நாகப்பட்டினம்

அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.ட்டீ.அன்பழகன், பா.ரவி, மு.லெட்சுமி நாராயணன், வெ.சரவணன், வை.நாகராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வை.நாகராஜ் வரவேற்புரை யாற்றினார். நா.அசோக்குமார் (உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம்), காசி.இளங்கோவன் (முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகம்), ஜெக.மணிவாசகம் (தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம்), ப.அந்துவன் சேரல் (மாநில உயர்மட்டக் குழு, ஜாக்டோ - ஜியோ) ஆகியோர் உரையாற்றினர். மாநில ஒருங்கிணைப் பாளர் பாவலர் க.மீனாட்சிசுந்தரம் நிறைவுரை யாற்றினார். இறுதியாக மாவட்ட ஒருங்கிணைப் பாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நன்றி கூறினார்.

## கரூர்

16.12.2018 அன்று மாலை அரசு கலைக் கல்லூரியில் உள்ள அரங்கில் ஒருங்கிணைப் பாளர்கள் மு.மகாவிஷ்ணன், சு.வேலுமணி, வ.குமரவேல், ஆ.இருதயசாமி, எம்.மலையாளம், பி.சரவணகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில ஒருங்கிணைப்பாளர் மு.சுப்பிர மணியன் கலந்து கொண்டு விளக்கவுரை யாற்றினார். இதில் பல்வேறு துறைச் சங்க நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

# கஜா புயல் நிவாரணப் பணிகள்

## தருமபுரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரண பொருட்களாக ஒரு குடும்பத்துக்கு தேவையான 5 கிலோ அரிசி, பருப்பு எண்ணெய், உள்ளிட்ட மள்ளிகை சாமான்களும், அதேபோல் குடும்பத்துக்கு தேவையான வேஷ்டி, லுங்கிகள், நைட்டி, புடவை என மொத்தம் 100 குடும்பங்களுக்கு தேவையான ரூ. 1.50 லட்சம் மதிப்பிலான பொருட்களை புதுக்கோட்டைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்டசெயலாளர் ஏ.சேகர் மாவட்டப் பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர் பி.எஸ்.இளவேணில்,

வேளாண்மைத் துறை அமைச்சு பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.யோகராசு, தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் பழனியம்மாள், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் சா.இளங்குமரன், நகர அமைப்புதுறை சங்க தலைவர் மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்

## நாகப்பட்டினம்

கஜா புயலால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள வேதாரண்யம் பகுதியில் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, மாவட்ட இணைச் செயலாளர் து.இளவரசன், முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாதிக்கப்பட்டுள்ள வேதை வட்டச் செயலாளர் வி.கணேசன், முன்னாள் வட்டச் செயலாளர் எம்.ஜி.இராம மூர்த்தி உள்ளிட்டோரின் வீடுகளுக்கு சென்றதோடு அப்பகுதி மக்களையும் சந்தித்து ஆறுதல் தெரிவித்தோம். அப்பகுதி மக்களுக்கு ரூ.10,000 மதிப்பிலான உணவுப் பொருட்களை வழங்கப்பட்டது.

பின்னர் வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று அங்கு தொடர்ந்து மக்கள் பணியாற்றி வரும் அலுவலக வட்டாட்சியர் மற்றும் ஊழியர்களை சந்தித்து உரையாடப்பட்டது.

வரலாறு காணாத வகையில் பாதிப்பிற்கு உள்ளான பகுதியாக இப்பகுதி காட்சியளிக்கின்றது. கான்கிரீட் வீடுகளைத் தவிர்த்து அனைத்து வீடுகளில் வசித்தோரும் வசிக்க வீடின்றி தவிப்பதை காண்பதும், தம் வாழ்வாதாரத்தின் பெரும் சொத்தாக வளர்த்த மரங்களையும் ஆடு மாடுகளையும் இழந்த தவிப்பு மனதை மிகவும் துன்பப்படுத்துவதாக இருந்தது.

ஊருக்கு உணவளிக்கு உழவர்கள் வீட்டில் உலைவைக்க வாடி நிற்பது கண்டு கலங்காதோர் யாரும் இருக்க இயலாது. மின் வாரியப் பணியாளர்கள் கொட்டும் மழையிலும் தம் பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர்.

புயல் நிவாரண கணக்கெடுப்பு பணி சரியாக துவங்காத நிலை. பத்துக்கும் பேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் இல்லாத நிலை. இரவு பகலாக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை உள்ளிட்டு அனைத்துத் துறை ஊழியர்களும் மீட்புப் பணியை தம் வீடு மறந்து சொந்த நலன் துறந்து சரியான உணவு, முறையான ஓய்வு இல்லாமல் பணிசெய்து வருகின்றனர். அரசு இயந்திரம் இன்னும் நன்கு செயல்பட உரிய வழிகளை செய்திட வேண்டிய நேரமிது.

கஜா புயல் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மண்டலம் வேதாரண்யம் தாலுகாவுக்கு உட்பட்ட பண்ணாள் சிறுதலைகாடு கடல் மீனவர் கூட்டுறவு சங்கத்தை சார்ந்த மீனவர்களுக்கு தமிழ்நாடு அரசு மீன் துறை ஊழியர் சங்கம் சார்பில் சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள சலங்கை வலைகளை துணைத் தலைவர் இரா.நடேசராசா தலைமையில் பொதுச் செயலாளர் த.மகாராஜன் வழங்கினார். பொருளாளர் ம.நந்தகுமார் நன்றி கூறினார்.

## திருவாரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம் கடந்த 23.11.2018 அன்று சென்னையில் கூடி எடுக்கப்பட்ட முடிவின்

அடிப்படையில் கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள திருவாரூர் மாவட்ட மக்களுக்கு வழங்க நிவாரணப் பொருட்கள் வரப்பெற்றது.

திருப்பூர் மாவட்டத்திலிருந்து ரூ.3 லட்சம் மதிப்புடைய நிவாரணப் பொருட்கள் திருவாரூர் மாவட்டத்திற்கு 7.12.2018 அன்று வரப்பெற்றது. அவற்றினை மன்னார்குடி வட்டம், கோட்டூர் ஒன்றியம், அகர களப்பால் கிராம மக்களுக்கு திருப்பூர் மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஈஸ்வரன் உள்ளிட்ட தோழர்களால் நேரில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன், முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.அகோரம் ஆகியோர் பங்கேற்றனர்.

நீலகிரி மாவட்டத்திலிருந்து ரூ.1,50,000 மதிப்புடைய நிவாரணப் பொருட்கள் திருவாரூர் மாவட்டத்திற்கு 7.12.2018 அன்று வரப்பெற்றது. அவற்றினை திருத்துறைப்பூண்டி வட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் பள்ளங்கோவில் கிராம மக்களுக்கு நீலகிரி மாவட்டத் தலைவர் ஆனந்தன் நேரில் வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து ரூ.2,50,000 மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து ரூ.1 லட்சம் மதிப்புடைய நிவாரண பொருட்கள் 12.12.2018 அன்று வரப்பெற்றது. அவற்றினை கூத்தாநல்லூர் வட்டம், செருவாமணி கிராமத்திலும், மன்னார்குடி வட்டம் நத்திமாங்குடி (ஆலத்தூர்) கிராமத்திலும் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் வழங்கப்பட்டது. இதில் மாநிலச் செயலாளர்கள் சி.ஆர்.ராஜ்குமார் மற்றும் எம்.சௌந்தரராஜன், தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் வெங்கடேசன், மாவட்ட நிர்வாகிகள் சுப்பிரமணியன், அண்ணாமலை, பரமசிவம், முருகன், திருவாரூர் மாவட்ட நிர்வாகிகள் எம்.ராஜமாணிக்கம், ஏ.தனபால், டி.மணிவண்ணன், எஸ்.செங்குட்டுவன் ஆகியோர் பங்கேற்றனர். இந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்டத் தலைவர் ஜி.பைரவநாதன், மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம், மாவட்ட இணைச் செயலாளர்கள் சி.பிரகாஷ், எஸ்.தியாகராஜன், அனைத்து மருந்தாளுநர் சங்க மாநில பொதுச் செயலாளர் யு.சண்முகம் மற்றும் எஸ்.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தோழர் சேகருக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.......

தோழர் சேகர் நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்...

TNGEAவின் தர்மபுரி மாவட்டச் செயலாளர்...

உண்மையிலேயே, தகவலை நமது மாநிலச் செயலாளர் மோகனமூர்த்தி கூறியதும் நெகிழ்ந்து போனேன்...

தோழர் சேகர் சமீப காலம் வரை உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்தவர்...

துறை நிர்வாகம், அவருக்கு பணி மாறுதல் வழங்கியது...

வழங்கப்பட்ட பணி மாறுதல் தனது சுயமரியாதையை சீண்டிய செயல்...

தனது அப்பழுக்கற்ற நேர்மையான பணிக் கலாச்சாரத்திற்கு ஏற்பட்ட இடையூறு எனக் கருதி சங்கத்துடன் கலந்து பேசி உடனடியாக தாய்த் துறைக்கு திரும்பி இன்று அற்புதமாக பொது சுகாதாரப் பணிகளை செய்து வருகிறார்......

தோழர் சேகர் கேரள வெள்ள நிவாரண நிதிக்கு ரூ.1,00,000 (ஒரு லட்சம்) TNGEA, மூலம் வழங்கினார்...

தற்சமயம் 37,297 அதுவும் 15 நாள் சரண்டர் தொகையை அப்படியே கஜா புயல் நிவாரண நிதிக்காக மாநில மையத்திடம் வழங்கியுள்ளார் எனும் போது...

நன்றி.....

வாழ்த்துக்கள்..... என சம்பிரதாயமாக மட்டும் கூறி விடை பெற முடியவில்லை.

தோழர் சேகர் போன்ற தோழர்களை உறுப்பினர் களாக, நிர்வாகிகளாக பெற்றுள்ளதால் நமது சங்கம் பெருமை கொள்கிறது.

புரட்சி வாழ்த்துக்கள் தோழர் சேகர்...

**இரத்ததானம் செய்வோம் உயிர்களை காப்போம்!**

# தமிழகம் முழுவதும் ஆயிரம் இடங்களில் போனஸ் கேட்டு ஆர்ப்பாட்டம்

**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழு முடிவின்படி பொங்கல் போனஸ் ஏ மற்றும் பி பிரிவினருக்கு ரூ. 3,000-மும், சி மற்றும் டி பிரிவினருக்கு உச்ச வரம்பின்றி ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கக் கோரி தமிழகம் முழுவதும் ஆயிரம் அரசு அலுவலகங்கள் முன்பு 28.12.2018 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்ற விவரம். இதில் ஏராளமான பெண் ஊழியர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று தங்கள் உரிமைகளுக்காக கோஷம் எழுப்பினர்.

## சென்னை

**குறளகம்** பகுதிக் குழு அலுவலக வளாகத்தில் துணைத் தலைவர் செல்வராணி தலைமையில் நடைபெற்றது. மேலும் குறளகம் வளாகம் மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மாநகராட்சி பகுதியில் ரிப்பன் மாளிகை வளாகத்தில் செயலாளர் வை.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இணை செயலாளர் நெடுமாறன் நன்றி கூறினார்.

**எழும்பூர்** பகுதிக் குழுவில் கன்னிமாரா நூலகம், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலக வளாகம், ஆவண காப்பகம் ஆகிய இடங்களில் பகுதித் தலைவர் அன்சர்பாஷா தலைமையில் நடைபெற்றது.

**தங்கசாலை** பகுதிக் குழுவில் தண்டையார் பேட்டை வணிகவரி அலுவலகம், வடசென்னை ஐடிஐ, ஸ்டான்லி மருத்துவமனை, அயனாவரம் மாநகராட்சி மண்டலம் மற்றும் மனநல காப்பக வளாகத்தில் நடைபெற்றது.

**அம்பத்தூர்-ஆவடி** பகுதிக் குழுவில் வில்லிவாக்கம் பிடிஓ அலுவலகம், அம்பத்தூர் ஐடிஐ, தாலுகா அலுவலகம், உணவு பொருள் வழங்கல் அலுவலகம் ஆகிய இடங்களில் பகுதி தலைவர் வேல்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள் த.ஏழுமலை, ம.அந்தோணிசாமி, இ.டேனியல் சத்தியராஜ், கோபிநாதன், வேல்முருகன், சுந்தரமூர்த்தி, மோகன், ஜெ.பட்டாபி, நெடுமாறன், புருஷோத்தமன், காமராஜ் அம்பேத்கர், தவ்லத்துல்லா, ஜி.மகேந்திரன், எம்.விவேகானந்தன், தாமோதரன், அஜய்ராஜ், சுமதி, மோகன்ராஜ், வி.விஜயகுமரன், வேலு, வேல்பாண்டியன், முன்னாள் மாநில துணைத் தலைவர்கள் எஸ்.ஏ.வெற்றிராஜன், பி.எஸ்.அப்பர் ஆகியோர் உரையாற்றினர்.

மேற்கண்ட ஆர்ப்பாட்டங்களில் ஏராளமான பெண்கள் உட்பட 700-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி

ஓசூர், கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை, சூளகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய வட்டங்களில் உச்ச வரம்பின்றி ஒரு மாத ஊதியம் போனஸ் வழங்கக் கோரி மாவட்டம் முழுவதும் 36 இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர் பங்கேற்று சிறப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகள் பி.சந்திரன், சி.பி.ஜெயராமன், ஆர்.நடராஜன், கே.ஜெயலட்சுமி, ஆர்.நாகராஜன், கே.காமராஜ், வி.தேவராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## திண்டுக்கல்

மாவட்டம் முழுவதும் 25 இடங்களில் நடைபெற்றது. திண்டுக்கல்லில் மாவட்டத் தலைவர் ஜெ.எஸ்.விஜயகுமார், துணைத் தலைவர் டி.ராஜமாணிக்கம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இணைச் செயலாளர் மா.சுகந்தி, ஒட்டன்சத்திரத்தில் மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி, ஆத்தூர் மாவட்ட துணைத்தலைவர் ஆர்.மகுடபதி, நிலக்கோட்டை மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி, மாவட்ட இணைச் செயலாளர் வீரகடம்பகோபு ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

## திருப்பூர்

உடுமலைப்பேட்டை வட்டக்கிளை சார்பாக காலை 10 மணிக்கு நெடுஞ்சாலைத் துறை

அலுவலகத்தில் துவங்கி பொதுப்பணித் துறை அலுவலகம், சமூக நலத்துறை அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், அரசு கலைக் கல்லூரி, வனத்துறை அலுவலகம், பட்டு வளர்ச்சித் துறை, நகராட்சி அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகம், ஊரக வளர்ச்சித்துறை அலுவலகம், வேளாண்மைத் துறை அலுவலகம், வட்டாரக் கல்வி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடிமங்கலம் ஊரக வளர்ச்சித் துறை அலுவலகம் என 14 இடங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பெண்கள் உட்பட ஏராளமான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

### நாகப்பட்டினம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. குத்தாலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வட்டக் கிளைத் தலைவர் சாமி.மனோகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாகை வட்டாட்சியர் அலுவலகம், மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

### கரூர்

மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியம், வட்டாட்சியர், அரசு மருத்துவமனை, வணிக வரித்துறை, வேளாண்மைத் துறை, நகராட்சி, கூட்டுறவுத் துறை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 25 இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் வட்ட நிர்வாகிகள் தட்சிணாமூர்த்தி, சந்தானம், ரவி, விஜயலட்சுமி, மகேஸ்வரி, சித்திக், பிரகாஷ், தமிழ்வாணன், சண்முகசுந்தரம் உள்ளிட்ட அரசுத் துறை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர், 282 பெண் ஊழியர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட அளவிலான இயக்க செய்திகள்

### நாகப்பட்டினம்

அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மாவட்டத்தில் இல்லாதபோது முன்தேதியிட்டு ஊழியர் நலன்களுக்கு எதிரான வெளியான பணியிட மாறுதல் ஆணையினை உடனடியாக ரத்து செய்யக் கோரி மாவட்ட நிர்வாகத்தை கண்டித்து தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க நாகை மாவட்டத் தலைவர் எல்.பிரேம்சந்திரன் தலைமையில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மாவட்டச் செயலாளர் டி.இளவரசன் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க பொதுச் செயலாளர் பி.அந்துவன்சேரல், மாவட்ட நிர்வாகிகள் பி.ராணி, ஹரிகிருஷ்ணன், எம்.தமிழ்வாணன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். சங்கத்தின் மாவட்ட பொருளாளர் எஸ்.பிச்சைப்பிள்ளை நன்றி கூறினார்.

### கரூர்

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் மரு.ரோஸிவெண்ணிலாவின் ஊழியர் விரோத போக்கினை கண்டித்தும், பழி வாங்கும் நோக்கில் அலுவலக கண்காணிப்பாளர்கள் சி.கண்ணன், சாமுவேல் சத்தியகுமார் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பணியிட மாறுதல் உத்தரவினை ரத்து செய்திடக் கோரியும், சர்வாதிகாரப் போக்குடன் செயல்பட்டு வரும் மரு.ரோசிவெண்ணிலாவை பணியிட மாறுதல் செய்திடக் கோரியும் அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 12.12.2018 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை கரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இதனை மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் விளக்கவுரையாற்றினார். இதில் பல்வேறு துறைச் சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் போராட்டத்தை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார். இதில் 80 பெண்கள் உட்பட 180 பேர் கலந்து கொண்டனர்.

1

BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT
( Special Original Jurisdiction )
Monday, the Tenth day of December Two Thousand Eighteen
PRESENT
**The Hon'ble Mr.Justice K.K.SASIDHARAN**
**and**
**The Hon'ble Mr.Justice G.R.SWAMINATHAN**

WP(MD) NO.23928 OF 2018

S.LOGANATHAN, ... PETITIONER

Vs

1.THE CHIEF SECRETARY,
GOVERNMENT OF TAMILNADU,
SECRETARIAT, FORT ST.GEORGE,
CHENNAI-9.

2.THE HOME SECRETARY,
GOVERNMENT OF TAMIL NADU,
SECRETARIAT, FORT ST.GEORGE, CHENNAI.

3.THE JOINT ACTION COMMITTEE OF
TAMILNADU TEACHERS ORGANIZATION
GOVERNMENT EMPLOYEES ORGANIZATION,
SECRETARIAT BUILDING,CHENNAI-9.

4.M.SUBRAMANIAN,
PRESIDENT, TAMIL NADU GOVERNMENT EMPLOYEES ASSOCIATION,
CHEPAUK, CHENNAI.

5.ANBARASU,
SECRETARY, TAMIL NADU GOVERNMENT
EMPLOYEES ASSOCIATION, CHEPAUK, CHENNAI.

6.MAYAVAN,
CONVENOR, THE JOINT ACTION COMMITTEE OF
TAMILNADU TEACHERS ORGANIZATION-GOVERNMENT
EMPLOYEES ORGANIZATION, SECRETARIAT BUILDING,
CHENNAI.

7.MEENAKSHI SUNDARAM,
ORGANIZER, THE JOINT ACTION COMMITTEE OF
TAMILNADU TEACHERS ORGANIZATION-GOVERNMENT
EMPLOYEES ORGANIZATION, SECRETARIAT BUILDING,
CHENNAI. ...RESPONDENTS

WEB COPY

Petition praying that in the circumstances stated therein and in the affidavit filed therewith the High Court will be pleased to issue a Writ of Mandamus or any other appropriate Writ, Order and

Direction in the nature of Writ of Mandamus directing the first respondent to prohibit and forbearing the 3rd respondent and its members and respondents 4 to 7 from going on or organising or participating in any kind of strike, agitation in violation of Rule 22 of Tamil Nadu Government Servants Conduct Rules.

ORDER : This petition coming on for orders upon perusing the petition and the affidavit filed in support thereof and upon hearing the arguments of Mr.M.VIJI, Advocate for the petitioner and of Additional Advocate General for R1 & R2 and Mr.L.SHAJI CHELLAN, Advocate for R3 to R7, the court made the following order:-

(Order of the Court was made by **G.R.SWAMINATHAN**., J.)

Heard the learned counsel for the petitioner and the learned Additional Advocate General for the respondents 1 and 2 and the learned counsel for the respondents 3 to 7.

2.Pursuant to the order dated 21.09.2017 in Contempt Petition (MD)No.1074 of 2017, the Committee that was constituted to look into the implementation of the 7th Central Pay Commission report, submitted its report and consequently G.O.Ms.No.303, Finance Department, dated 11.10.2017 came to be issued. In the said Government Order, it has been mentioned that the revised pay level would take notional effect from 01.01.2016 and monetary benefit from 01.10.2017. Since certain pay anomalies arose, there was a request for rectification of the same and the Government constituted One Man Committee vide G.O.Ms.No.57, Finance Department dated 19.02.2018. The employees felt aggrieved that they have not been given monetary benefit with effect from 01.01.2016 and submitted a representation to the said One Man Committee under the Chairmanship of Mr.M.A.Siddique, I.A.S., the Secretary to Government (Expenditure), Finance Department. It appears that the said One Man Committee was not inclined to consider the aforesaid representation made by the employees in view of the absence of any express term of reference in G.O.Ms.No.57 dated 19.02.2018.

3.We went through the text of the Government Order in full. On a conjoint reading of the preamble portion as well as the terms of reference and taking into account the fact that the Government of India has given monetary benefit from 01.01.2016, we are of the view that the demand made by the employees that they should be given monetary benefit with effect from 01.01.2016 would fall within the terms of reference. Hence, we direct the One Man Committee constituted under G.O.Ms.No.57 dated 19.02.2018 to consider this representation also.

4.The learned Additional Advocate General states that the tenure of the Committee expired on 31.07.2018 and it was extended periodically. The last extension was upto 30.11.2018. Since the Committee is yet to submit its report, we direct the Government to extend the tenure of the Committee and we direct the One Man

http://www.judis.nic.in

Committee to answer this issue viz., to give monetary benefits to the employees with effect from 01.01.2016 onwards.

5.The learned Additional Advocate General is directed to circulate a copy of the report of the Expert Committee under the Chairmanship of Thiru.T.S.Sridhar, I.A.S., with regard to restoration of old pension scheme in a sealed cover during this week.

6.The Committee shall take earnest efforts to answer the reference and submit a report to the Government on or before 05.01.2019. Copy of the said report together with the stand of the Government is to be placed before me on 07 January,2019.

7.Post the writ petition on 07 January, 2019.

8.Mr.Shaji Chellan, learned counsel for the respondents 3 to 7, on earlier occasion has undertaken that the Unions would not resort any strike till 31.12.2018. Since this case is adjourned to 07.01.2019, the undertaking given earlier will continue.

sd/-
10/12/2018

/ TRUE COPY /

Sub Assistant Registrar (C.S.)
Madurai Bench of Madras High Court,
Madurai - 625 023.

TO
1.THE CHIEF SECRETARY,
GOVERNMENT OF TAMILNADU,
SECRETARIAT, FORT.ST.GEORGE,
CHENNAI-9.
2.THE HOME SECRETARY,
GOVERNMENT OF TAMIL NADU,
SECRETARIAT, FORT.ST.GEORGE, CHENNAI.

**COPY TO:**
1. Thiru.T.S.SRIDHAR, I.A.S, (Expert Committee Chairman) THE SECRETARY TO GOVERNMENT (EXPENDITURE), FINANCE DEPARTMENT, [illegible], CHENNAI.

2 THE ADDITIONAL ADVOCATE GENERAL, MADURAI BENCH OF MADRAS HIGH COURT, MADURAI.

+1. C.C. to Mr.S.SHAJI CHELLAN, Advocate, Sr No.22977
+1CC TO SPECIAL GOVERNMENT PLEADER, SR NO.23181

ORDER IN
WP(MD) No.23928 of 2018
Date 10/12/2018

WEB COPY

http://www.judis.nic.in

MR/PM-AC/EAR-1/12.12.2018/3P.TC

A I S G E F

# ALL INDIA
# STATE GOVERNMENT EMPLOYEES FEDERATION

Affiliated to the TUI (Public Services)

T C No. 21/425, Gandhari Ammankovil Street, Thiruvananthapuram – 695 001 INDIA
Fax: 0471 – 2330849 Ph: 0471 – 4000849 email: aisgefgs@gmail.com

Chairman: General Secretary:
Subhash Lamba A. Sreekumar

No. 47/AISGEF/HQ Dated, 13th December, 2018.

To

The Chief Secretary,
Government of Tamil Nadu,
Secretariat, Chennai – 600009.

Sir,

Sub: National strike on 8th and 9th of January, 2019 – Strike Notice – Submitted.

The economic and labour policies pursued by the Union Government and majority State Governments create grave miseries to the entire people of the country. The State Governments employees are the worst affected due to the above anti people policies.

The prices of essential commodities are going up without any control. The price escalation of petroleum products gives heavy profit to the Corporates, whereas it creates additional burden to the people. The Universal Public Distribution System in the country is totally damaged.

The amendments in Labour Laws and shift towards the right wing policies result in the loss of rights of workers and trade unions. As a result of the drastic cuts in social security measures the living condition of the working class became more pathetic. Outsourcing, Contractual and daily wage employment became commonplace everywhere in the State Government services.

The Defined Pension System has been abandoned. The Union Government and almost all State Governments implemented the National Pension System as dictated by the World Bank and the IMF. The recent decision of the Union Government to enhance the share of contribution of employer to 14% does not fulfill the grievances of employees. The Corporates will benefit from this decision as the outflow to stock market will increase.

The State Government employees in the country have organised various agitations to press for the demands but the Governments did not pay attention to settle the issues. Hence All India State Government Employees' Federation decided to go on a two day nationwide strike on 8th and 9th January, 2019.

This is to give notice that the employees who are members of the affiliated organizations of the All India State Government Employees Federation will go on two days' (Forty eight hours) strike on $8^{th}$ and $9^{th}$ January, 2019.

The Charter of Demands in pursuance of which the employees will embark upon the two day strike action is furnished below:

## Charter of Demands:

1. Scrap PFRDA. Enrol all the subscribers under NPS in to the Defined Pension Scheme with retrospective effect.
2. Regularize all contract, casual and outsourced employees and teachers. Fill up all the vacant posts as per statutory recruitment rules.
3. Urgent measures through universalization of public distribution system and banning speculative trade in commodity market for containing price-rise;
4. Contain unemployment through concrete measures for employment generation;
5. Strict enforcement of all basic labour laws without any exception or exemption and stringent punitive measures for violation for labour laws;
6. Universal social security cover for all workers;
7. Minimum wages of not less than Rs. 18,000/- per month with provisions of indexation;
8. Assured enhanced pension not less than Rs. 3000/- P.M. for the entire working population;
9. Stoppage of disinvestment in Central/State PSUs;
10. Stoppage of contractorisation in permanent perennial work and payment of same wage and benefits for contract workers as regular workers for same and similar work;
11. Removal of all ceilings on payment and eligibility of bonus, provident fund; increase the quantum of gratuity;
12. Compulsory registration of trade unions within a period of 45 days from the date of submitting applications; and immediate ratification of ILO Conventions C 87 and C 98;
13. Stoppage of Labour Law Amendments;
14. Stoppage of FDI in Railways, Insurance and Defence.

As we decided to go on two day nationwide strike on $8^{th}$ and $9^{th}$ January, 2019, I request you to consider this as strike Notice.

Thanking you,

Yours faithfully,

A. SREEKUMAR
General Secretary

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## வணிக வரிப் பணியாளர் சங்கம்

வணிகவரித் துறையில் முதுநிலை பிரச்சனைக்கு காரணமான அலுவலகர்கள் மீது சிபிஐ விசாரணை நடத்திடக் கோரி தமிழ்நாடு வணிக வரிப் பணியாளர் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் 8வது மாநில மாநாடு கோவை, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் 22.12.2018 அன்று நடைபெற்றது. மாநிலத் தலைவர் நா.ஜனார்த்தனன் தலைமை யேற்றார். அஞ்சலித் தீர்மானத்தை மாநில துணைத் தலைவர் கோ.மூர்த்தி வாசித்தார். வரவேற்புக் குழுத் தலைவர் வே.செந்தில்குமார் வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிர மணியன் துவக்கவுரையாற்றினார். முன்னாள் மாநில நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். வேலை அறிக்கையினை பொதுச் செயலாளர் சு.ஜெயராஜராஜேஸ்வரனும், நிதிநிலை அறிக்கை யினை பொருளாளர் அ.முருகனும் முன்வைத்தனர்.

வணிகவரித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் குழந்தை களில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் 90% மேல் மதிப்பெண் பெற்றவர்களுக்கும், கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் மாநில மற்றும் தேசிய அளவில் விருது பெற்ற குழந்தைகளுக்கும் நினைவுப் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

பின்னர் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் தேர்தலில் தலைவராக நா.ஜனார்த்தனன், பொதுச் செயலாளராக சு.ஜெயராஜராஜேஸ்வரன், ஜோ.வளன் பொருளாளராகவும், மாநில துணைத் தலைவர்களாக ஜோ.எழிலன், சா.டானியல் ஜெய்சிங், பா.சுந்தரராஜன், தே.முருகன், க.முருகானந்தம், சி.கலைச்செல்வி, மாநில செயலாளர்களாக கா.கற்பகம், அ.திரவியராஜா, பா.ரவிச்சந்திரன், பெ.அங்கப்பன், ஸ்ரீபாபு, மே.மு.குருலட்சுமி ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் இரா.பன்னீர்செல்வம் நிறைவுரையாற்றினார். வரவேற்புக் குழு செயலாளர் மே.மு.குருலெட்சுமி நன்றி கூறினார்.

## தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கம்

இளைஞர்களின் வேலை வாய்ப்பினை பறிக்கும் ஆதிசேஷையா குழுவின் அதிரடி ஆரம்பம். பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் அரசாணை எண் 56ன்படி ஆட்குறைப்பு செய்ய அமைக்கப்பட்ட ஆதிசேஷையா குழுவில் 452 பணியிடங்களை குறைக்க உரிய ஆவணங் களுடன் 26.12.2018 அன்று துறைத் தலைவர் குழுவிடம் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் சார்பாக ஆட்குறைப்பு செய்யும் நடவடிக்கையை கண்டித்தும், ஆட் குறைப்பு நடவடிக்கையை கைவிடக் கோரியும் 26.12.2018 அன்று புதன்கிழமை 12 மணியளவில் சென்னை மருத்துவத் துறை தலைமையிடமான டி.எம்.எஸ் வளாகத்தில் கவனஈர்ப்பு ஆர்ப்பாட் டம் மாநில துணைத் தலைவர் சிவராமன் தலைமையில் நடைபெற்றது. கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு வருகை தந்த அனைத்து மாவட்ட ஊழியர்களையும் மாநில செயற்குழு உறுப்பினர் அ.இராமமூர்த்தி வரவேற்றார். பொதுச் செயலாளர் ப.அந்துவன் சேரல் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாகவும் அரசாணை எண் 56-ன்படி துறையில் எடுக்கப்பட்டு வரும் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கவுரையாற்றினார். சங்கத்தின் மேனாள் பொதுச் செயலாளர் இரா.சீனிவாசன், மேனாள் மாநிலத் தலைவர் முனைவர் சு.கிருஷ்ணன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க டி.எம்.எஸ். பகுதித் தலைவர் செந்தில், பகுதிக் குழு நிர்வாகிகள் நம்பிராஜன், டேனியல் ஆகியோர் ஆர்ப்பாட்டத் தினை வாழ்த்தி பேசினர். இறுதியாக மாநில பொருளாளர் முனைவர் கா.பால்பாண்டி நன்றி கூறினார். இதில் மாநிலம் முழுவதிலுமிருந்தும் 400-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர் சங்கம்

நாகப்பட்டினத்தில், டிசம்பர்- 7, 8 ஆகிய தேதிகளில் சங்கத்தின் 6-வது மாநில மாநாடு

நடைபெற்றது. இதன் வரவேற்புக்குழு நிறைவுக் கூட்டம், நாகை அரசு ஊழியர் சங்கக் கூட்ட அரங்கில், சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் ஏ.ட்டி.அன்பழகன் தலைமை வகித்தார். வரவேற்புக் குழுத் துணைத் தலைவர் எஸ்.கணேசன் வரவேற்புரையற்றினார். வரவேற்புக் குழுப் பொருளாளர் கே.ரவிச்சந்திரன் வரவு செலவு அறிக்கையை முன்வைத்தார்.

அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன்சேரல், நாகைத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் சு.சிவகுமார், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, உள்ளிட்டோர் பாராட்டிப் பேசினர்.

நாகையில் சாலைப் பணியாளர் சங்கத்தின் மாநில மாநாடு சிறக்கப் பணியாற்றிய வரவேற்புக் குழுத் தலைவர் ஏ.டி.அன்பழகன், மாநிலத் துணைத் தலைவர் வே.கணேசன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், தோழமைச் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோருக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.பாலசுப்பிரமணியன், மாநிலப் பொதுச் செயலாளர் ஆ.அம்சராஜ், மாநிலப் பொருளாளர் இரா.தமிழ் ஆகியோர் நினைவுப் பரிசுகள் வழங்கிப் பாராட்டிப் பேசினர். வரவேற்புக்குழுச் செயலாளர் வை.உதயகுமார் நன்றி கூறினார்.

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற சங்கத்தின் 6வது மாநாட்டு முடிவின்படி தமிழகம் முழுவதும் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடுமலைப்பேட்டை உதவி கோட்டப் பொறி யாளர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட் டத்திற்கு கே.செல்லமுத்து தலைமையேற்றார். துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். கே.வெங்கிடுசாமி சிறப்புரையாற்றினார். மாநிலத் தலைவர் மா.பாலசுப்பிரமணியன் நிறைவுரை யாற்றினார். ஆர்.ஜெகதீஸ்வரன் நன்றி கூறினார்.

## தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்கம்

மாநில மைய முடிவின்படி 28.12.18 -அன்று சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பு மாநிலத் தலைவர் ஆ.போஸ் தலைமையில் மாபெரும் உண்ணாவிரத் போராட்டம் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் துவக்கவுரையாற்றி னார். உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணியமைப்பு விதிகளில் பணிப் பாதுகாப்பு வழங்கிட வேண்டும், பணிச் சுமைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், அலுவலக கட்டமைப்பு, வாகன வசதி மற்றும் உதவியாளர் நியமனம் வேண்டும், தாய்த்துறைக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை விளக்கி மாநில பொதுச் செயலாளர் இ.கோவிந்தராஜ் பேசினார்.

மாநில துணைத் தலைவர் பி.நல்லத்தம்பி, இணைச் செயலாளர்கள் ஏ.ட்டீ.அன்பழகன், எல்.ஸ்டாலின் பிரபு, மாநில அமைப்புச் செயலாளர் ஆர்.ரபீந்திரநாத், தலைமை நிலையச் செயலாளர் ஆர்.வேலவன் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினர்.

பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் க.கங்காதரன், நகராட்சி நிர்வாக ஆணையரக ஊழியர் சங்க மாநிலத் தலைவர் கி.இரகுராமன், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு அலுவலர் நலச் சங்க முன்னாள் மாநி பொதுச் செயலாளர் பி.ராஜகோபால், அரசு ஊழியர் சங்க டி.எம்.எஸ் பகுதிக்குழு செயலாளர் எம்.செந்தில் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். மாநிலப் பொருளாளர் ஜான் சிம்சன் நன்றி கூறினார். தமிழகம் முழுவதும் இருந்து 300-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com